# ாக்கு மாலை

எஸ். ஆறுமுகம்



புதுமலர் பிரசுரம்

# காதல் மாயை

எஸ். ஆறுமுகம்

புதுமைப் பிரசுரம்

பெண்ணாடம் * தெ. ஆ. ஜில்லா.

முதற் பதிப்பு செப்டம்பர்—1952

விலை ரூபா ஒன்று.

LOYAL PRINTERS, MADRAS-7.

# உங்களுடன் ஒரு கணம்

வாழ்க்கையின் பொது நியதியை ஒட்டிய முறையில் தன் கண்களுக்குத் தெரிந்தபடி உலகத்தைப் பார்த்து, தன் சிந்தனைக்குத் தோன்றிய விதத்தில் அதற்கு விளக்கம் கொடுத்து எழுதுவதுதான் இலக்கியம். இந்தத் தொகுப்பிலுள்ள கதைகளை எண்ணிப் பார்க்கும்போது, ஒரு பெருமிதம் எனக்குக் கனிகிறது. நிகழ் காலத்தில் இன்பம் கண்டு, வருங்காலத்தைப்பற்றிக் கவலை மிகுந்த சிந்தனைகள் இல்லாத காலத்தில் இவை அநேகமாக எழுதப்பட்டவை. உலகப் படைப்புக்கு—அதை இறைவன் படைத்திருந்தாலும் சரி; இயற்கை படைத்திருந்தாலும் சரி—கன்ம வினைத் தொடர் என்றோ, காரண காரியச் சங்கிலித் தொடர் என்றோ விளக்கம் கூறுகிறார்கள். ஆனால் என் இதயப் படைப்புக்கு ஒரே காரணம், ஒரே வரம்பு, ஒரே முடிவு எனக்கு அவை இஷ்டம் அளித்தன; இங்கிதம் அளித்தன; காலத்தின் நெருக்குப் பிடியிலிருந்து 'சிருஷ்டி கர்வம்' என்ற வியன்வெளிக்கு என்னை அழைத்துச் சென்றன.

காதல், வாழ்வின் உயிர்த் துடிப்பு; இலக்கியத்திற்கு இன்றியமையாததொன்று. மாயை, ஏதோ ஒரு உருவெளித் தோற்றம். இந்த இரண்டையும் பிணைத்துத்தான் தலைப்புக் கதைக்கு மகுடம் தந்தேன். இப்படித்தான் இந்த இணைப்பிலுள்ள பிற கதைகளிலும் நினைத்ததையும் நடந்ததையும், கனவையும் நனவையும், கண்ணால் கண்டதையும் கற்பனையால் சித்தரித்துக் கொண்டதையும் சேர்த்துக் கதைகள் சொல்ல முயன்றிருக்கிறேன். மனித மனங்களைப் பித்தனைப்போல மனம் காட்டும் வழியில் பிரித்தும் சேர்த்தும், சம்பவங்களைத் தோற்றுவித்தும், சலனங்களை மூட்டி வைத்தும் புது உலகம் படைத்திருக்கிறேன். வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களினின்றும் ஆராய்கிறேன்

என்பதைக் காட்டிலும், அது என் எண்ணம் என்றே துணிவுடன் கூற ஆசைப்படுகிறேன்.

ஜான் கால்ஸ்வர்த்தி கூறுகிறார்:

“என் சிறுகதைகளில் நான் பார்க்கும் ஒரே லட்சணம் அவை எனக்குத் திருப்தியளிக்கின்றனவா என்பதுதான்!”

நான் திருப்தியடைகிறேன். என் கதைகளை நீங்கள் படித்து அவற்றில் ஏதும் தன்மை, கண்டு வியந்தால், ஊரார் தன் குழந்தைகளைப் போற்றும் பெருமிதத்தில் இன்புறும் பெற்றவளைப்போல, என் உள்ளமும் கர்வக்களி மிகுந்து பொங்கும். அந்த ஆசியையும், வரப்பேற்றினையும், மகிழ்வையும் எனக்கு அருள வேண்டுமென்று தமிழ் வளர்க்கும் காவலரை யெல்லாம் தான் வளர்க்கும் ரசிகர்களான உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

‘காதல் மாயை’ உள்ளடக்கியிருக்கும் கதைகள் பொன்னி, சுதேசமித்திரன், அஜந்தா, கல்கி, குமுதம் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவை. அவற்றைப் பயன் படுத்திக் கொள்ள அன்புடன் அனுமதி தந்த ஆசிரியர்கட்கு என் இதயாஞ்சலிகள் உரியவை.

அந் நாளிலே என்னை எழுத்தாளனாக்கி, என் வளர்ச்சியில் பெருமை கண்டவர் என் நண்பர் திரு டி. வி. சுவாமிநாதன் அவர்கள். இதற்கு முன்னுரை வழங்கியிருக்கிறார் திரு ‘மாயாவி’ அவர்கள். ‘காதல் மாயை’ வெளிவரக் காரணமானவர் நண்பர் திரு. பிரேமநாதன். தொகுப்பை மிக அழகாக வெளிக்கொணர்ந்திருக்கின்றனர் பிரசுர அன்பர்கள் திரு இராமசுவாமி, திரு தாஸ் இருவரும். இவர்களையெல்லாம் நான் என்றும் மறக்க முடியாது; என் அன்பு கலந்த நன்றி அவர்களுக்கு. வணக்கம்.

‘பொன்னி’
24-8-52

எஸ். ஆறுமுகம்.

# முன்னுரை

என்னுடைய பழைய நண்பர் ஒருவர் சிறந்தவிமரிசகர் ஒரு பத்திரிகை விடாமல் வாங்கி ஒரு எழுத்து விடாமல் படிப்பவர். நாலைந்து வருடங்களுக்கு முன்பு டெல்லிக்கு உத்தியோகத்தை மாற்றிக் கொண்டு போனவர். அந்த ஊர் சீதோஷ்ண நிலைபிடிக்காததால் பழையபடி பம்பாய்க்கே சமீபத்தில் வந்துவிட்டார். அவரைப் பார்க்க ஒரு நாள் போயிருந்தேன். க்ஷேமலாபங்களை விசாரித்த பிறகு இலக்கிய விசாரத்தில் இறங்கினேன்.

"நான் இப்பொழுது தமிழ்ப் பத்திரிகைகள் - முக்கியமாக கதைப் பத்திரிகைகளைப் படிப்பதை அடியோடு விட்டு விட்டேன், ஸார்" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் அவர்.

"என்ன ஸார் அப்படி"

நண்பர் கூறியதை நான் அப்படியே ஒப்புக்கொள்ளவில்லை. இருந்தாலும் அவரிடம் முழுவதும் மறுத்துச் சொல்லவும் முடியவில்லை. ஏனென்றால் சமீப காலத்தில் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் (பிறமொழிப் பத்திரிகைகளைப் பற்றிய கவலை நமக்கு வேண்டாம்) வெளி வரும் பெரும்பாலான கதைகள், குறிப்பாகச் சிறு கதைகள் பத்து வருஷங்களுக்கு முந்தியவற்றை விடத் தரத்தில் மட்டமாகவே இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம், அன்றையைவிட இன்று அதிகமான பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதன் அளவுக்கு

சிறுகதை நுட்பமறிந்து நன்றாக அமையும் கதையை எழுதும் எழுத்தாளர்கள் தோன்றவில்லை.

கதை எழுதவேண்டும் என்ற ஆர்வம் இன்று கிழவர் முதல் குழந்தைகள் வரையில் பத்திரிகை படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்படுகிறது. அதில் முக்கால்வாசிப் பேர்களாவது எழுதத்தான் எழுதுகிறார்கள். ஆனால் அவை எப்படிப்பட்ட கதைகள்? அவைதாம் என் நண்பர் குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்தவை.

தமிழ்நாட்டுப் பத்திரிகாலய முதலாளிகள், நிர்வாக ஆசிரியர்கள் - இவர்களைப் பொருத்தவரையில் ஒவ்வொருவருக்கும் நல்ல கதைகளையே தங்கள் பத்திரிகைகளில் வெளியிட வேண்டுமென்ற திடமான நினைவு இருக்கிறது. ஆனால், அந்த நாசமாய்ப்போகிற 'நல்ல கதை எழுதுபவர்கள்' தங்கள் கதைகளுக்குப் பணமல்லவா கேட்கிறார்கள்! என் அனுபவத்தில் பல காலமாக நடந்து, நல்ல லாபத்தைத் தந்து கொண்டிருக்கும் பத்திரிகைகள் முதல் நேற்றுத் தோன்றிய 'நஷ்டத்தில் நடக்கும் பத்திரிகைகள்' வரையில், அவற்றின் முதலாளிகள் ஒரே கொள்கையைத்தான் கையாளுகிறார்கள். அதாவது, அவர்கள் ஒன்றுக்கு இரண்டு கொடுத்து 'கறுப்புச் சந்தை'யில் காகிதம் வாங்கத் தயார்தான். அச்சகத்துக்கும், பிளாக் செய்பவர்களுக்கும், ஓவியருக்கும், மற்றும் எழுத்தாளரைத் தவிர இத்துறையில் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் வாரிவிடத் தயார்தான்! ஆனால் இந்தப் 'பாழாய்ப்போன எழுத்தாளன்' பணம் கேட்கும்போதுதான் அவர்களுக்குப் பத்திரிகைத் தொழிலே வேண்டாமென்று தோன்றிவிடுகிறது. இதன் பயன், நல்ல எழுத்தாளர்கள் தங்கள் உழைப்பை இவர்களின் லாபத்துக்குக் காணிக்கை

செலுத்தத் தயாராக இல்லை; எனவே நல்ல கதைகள் அபூர்வமாகவே பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

புது எழுத்தாளர்களின் பாடு இப்படியல்ல. அவர்களுடைய ஆர்வம், தங்கள் கதைகள் பத்திரிகையில் தோன்றினால் போதும் என்ற லட்சியத்தில் நிறைவது. கதைக்கு மாத்திரம் பணம் கொடுக்கக் கசக்கும் பத்திரிகைகளுக்கு இவர்களுடைய ஆர்வம் இரையாகிறது. அவர்கள் லட்சியமும், பத்திரிகையாளரின் லட்சியமும் பூர்த்தியாகி விடுகின்றன. ஆனால், தமிழ் இலக்கிய வளர்ச்சி எங்கே போய்க்கொண்டிருக்கிறது? அது எங்கே போனால் என்ன ஸார்? நம் பத்திரிகைக்காரர்கள் இலக்கியம் வளரவா பத்திரிகை நடத்துகிறார்கள்? பாங்குப் பணம் பெருகுவதற்கல்லவா?

* * *

எந்தச் சிக்கலுக்கும் ஒரு விடுதலை உண்டு; எந்த நியதிக்கும் ஓர் விலக்கு உண்டு. அந்த ரீதியில் தமிழர்கள் ஒவ்வொருவர், (அவர்கள் எழுத்தாளர்களாயினும் வாசகர்களாயினும்) உள்ளத்திலும் தங்கி நிற்கும் பத்திரிகைகளும் ஒருசில இருக்கத்தான் இருக்கின்றன. அவ்வாறே அதிகப் பணத்தை எதிர்பாராமல், நல்ல கதைகளை எழுதி அவற்றைத் தமிழன்னைக்கு (இந்தப் பத்திரிகைக்காரர்களுக்கல்ல) காணிக்கையாகச் செலுத்தும் வசதியான நிலையிலுள்ள நல்ல எழுத்தாளர்களும் ஒரு சிலர் இருக்கின்றனர். அந்த ரகத்தில் ஒருவர் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர், நண்பர் எஸ். ஆறுமுகம்.

திரு. ஆறுமுகம் எனக்குக் கடிதத்தின் மூலம் பழக்கமானவர். இன்றளவும் ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியாமலே இருவரும் இலக்கிய நண்பர்களாக இருந்து வருகிறோம். ஆயினும், அவரின் அகம் - அதில் ஊறும் கற்பனை ஊற்று எனக்கு அவருக்கு முன்பே பழக்கமானது.

எழுத்தாளர்களிலே மூன்று வகை உண்டு. வெறும் சம்பவப் பின்னல்களாலே சிலந்திவலைபோலக் கதை பின்னி அதில் வாசகர்களைச் சிக்க வைப்பவர்கள் ஒரு ரகம். இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள், தங்களது காவிய நடையினாலே வாசகர்களைக் கவர்பவர்கள் இவை இரண்டும் சரிசமமாகக் கலந்த ஓர் பாணியில் எழுதுபவர்கள் தாம் மூன்றாவது ரகத்தவர். இந்தக் கடைசி வழியில் எழுதுபவர்களின் கதைகள பெரும்பாலும் சோடையாகப் போவதே கிடையாது. இரு கவர்ச்சிகளை ஏவிக் கதைகள் புனைவதால், ஒன்று சற்றுத் தரத்தில் இறங்கிவிட்டாலும், மற்றது அதை ஈடு செய்துவிடும். ஆகவே, இவர்களின் கதைகள் எந்த சாதாரணப்பத்திரிகையில் வந்தாலும், நல்ல கதையாகத்தான் இருக்குமென்று தைரியமாகப் படிக்கலாம். திரு. ஆறுமுகத்தின் எழுத்துவன்மை இத்தகையதுதான். இந்தப் புத்தகத்திலும், இவருடைய வேறுசில புத்தகங்களிலும் வந்த கதைகளன்றி இன்னும், பலபல, சிறு-சிறு மணிமணியான கதைகளை இவர் எழுதியிருக்கிறார். அவற்றில் பெரும்பாலானவற்றை நான் படித்திருக்கிறேன். நண்பர் ஆறுமுகத்தின் கதைகளிலே தென்றலின் இனிமையை ஒத்த நடை ஓடும். சுழிகளின்றி நிர்ச்சலனமாகப் பாயும் நதியைப் போன்றது இவரது கதை அமைப்பு. அந்த இளந் தென்றலையும், நிர்ச்சலமான நதியின் அழகையும், அதன் கரையாகிய இப் புத்தகத்தில் புகுந்து அனுபவித்துப் பாருங்கள்.

பொதுவாகவே நண்பர் ஆறுமுகம் எழுதிய கதைகள் அனைத்தும் ஏழ்மைச் சூழ்நிலை உடையவை. எளிய மக்களிடையே பலகாலம் வாழ்ந்து, அவர்கள் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டவர் போல அமைந்திருக்கும் இவரது

கதைகள். இப்புத்தகத்தில் அடங்கியுள்ள 'இளந்தென்றல்' 'தாய்' 'பாசம் வென்றது' 'ஆசைக்கனல்', முதலிய கதைகள் இப்படி உருவானவை. அவைகளிலே ஏழை மக்களின், ஆசாபாசங்கள், அவற்றின் விளைவு, துயரம், களிப்பு எல்லாம் விரவிக் கிடக்கின்றன.

புத்தகத்தின் பெயரைத் தாங்கியுள்ள 'காதல் மாயை' உண்மையிலே, இக்கதைகள் அனைத்துக்கும் சிகரமாக அமைந்திருக்கிறது. உண்மைதான்! காதலின் மாயையை அத்தான் நரசிம்மன் அறிந்திருந்த அளவுக்குக் கூட, அதிலே மூழ்கிக்கிடந்த விமலா அறிந்துகொள்ளவில்லையே?

'வாழும் காதல்' நமது சிந்தையைப் பறித்துவிடும் மற்றொரு சிறந்த சிறுகதை. கதை அம்சத்துக்கு அதிகப் பிரதானம் அளிக்காது நடையழகைக்கொண்டே வாசகர்களை மயக்கிவிடும் ஆசிரியரின் கதைகளுக்கு மற்றொரு சான்றாக இருப்பது 'வாழும் காதல்'. அதிலுள்ள காவிய நடையில் மனம் பதிந்துவிட்டால், கருத்தையும் கதையையும் நினைக்க உங்களுக்குப் பொழுதே கிடைக்காது. சிறுகதை இலக்கணங்கள் நன்கு பொருந்தி, மேல் நாட்டுச் சிறந்த ஆசிரியர்களின் கதைகட்கு ஈடு நிற்கிறது இக்கதை.

'நீறுபூத்த நெருப்பி'ல் ஆசிரியர், சந்தேகங்களை ஆராயாமல், அதன்மீது முடிவுகட்டிவிடுவதால் ஏற்படும் விபரீதத்தை நன்றாக விளக்கியிருக்கிறார்.

மொத்தத்தில், நண்பர் ஆறுமுகத்தின் இந்தக் கதைகள் அனைத்தும் ஒவ்வொருவரும் விரும்பிப் படிக்கத்தக்கவை.

இதில் ரஸமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன; ஆனால் அவை ரசாபாசமாகச் சொல்லப்படவில்லை. சமூகத்தின் இழுக்காறுகளும், செல்வச் செறுக்கின் இறுமாப்பும், ஏழ்மையின் இன்னல்களும் பொதிந்திருக்கின்றன; ஆனால் அவை எந்தக் குறிப்பிட்ட மனிதரையோ, சமூகத்தையோ குத்திக்காட்டும்வண்ணம் எழுதப்படவில்லை.

ஆகவே, குறையின்றி நிறைவுடன் படிக்கத்தக்க இக்கதைகளை மகிழ்ச்சியுடன் பெருமையுடன் தமிழ் வாசகர்களுக்கு சிபாரிசு செய்கிறேன்.

அந்தேரி, பம்பாய்
ஜுலை 28, 1952

அன்பன்,

மாயாவி.

# காணிக்கை

அன்றும் இன்றும் என் இலக்கிய வளர்ச்சியில் அன்பும் ஆதரவும் காட்டி வரும் மதிப்பிற்குரிய 'பொன்னி' ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களுக்கு இத்தொகுப்பினை என் அன்பின் காணிக்கையாக மகிழ்வுடன் சமர்ப்பிக்கிறேன்.

# இதனுள்ளே......

உங்களுடன் ஒரு கணம்

முன்னுரை ... 1

காணிக்கை ... 7

காதல் மாயை ... 9

பாசம் வென்றது ... 21

நீறுபூத்த நெருப்பு ... 34

இளந்தென்றல் ... 43

ஆசைக்கனல் ... 52

தாய் ... 64

வாழும் காதல் ... 76

*"...உன் இன்பமே என் உயிர்; உன் வாழ்வே என் வையம்; உன் கனவே என் லட்சியம். அதன் பலன் எனக்குக் காஞ்சனா கிட்டினாள்; ரதுவை நீ அடைந்தாய்...!"*

# காதல் மாயை

விமலாவின் கண்களில் இரண்டு முத்துக்கள் துளிர்த்தன; சிந்தின. இப்படிப்பட்ட ஏமாற்றம் நேருமென்று அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. ரகுராமன் எழுதியிருந்த அந்தக் கடிதத்தைத் திரும்பவும் படித்தாள். ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது; அழுகை வெடித்துப் புறப்பட்டது. தனக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் விளங்கிய ரகுராமனின் கைத்தலம் பற்றி, வாழ்க்கை வசந்தத்தில் மாங்குயிலின் தீஞ்சுவைக்கீதம் என்றும் இழைந்தோடுமென்று கனவு கண்டாள்; தான் மிஸஸ் ரகுராமனாகப் போவது தன் பாக்கியமே என்று எண்ணிப் பூரித்தாள் விமலா. நாளை வரும் காதலனின் வரவு நோக்கிக் காத்திருக்கும் காதலிக்கு முதல் நாள் இரவு ஓர் இன்ப வேதனையாகத்தானே தோற்றமளிக்கும்? அதே போலத்தான், தன் கைக்கு ரகுராமனிடமிருந்து கடிதம் கிடைக்கும்வரை விமலாவின் நிலை ஆகிவிட்டது.

ஆனால் அந்தக் கடிதம்.....!

**விமலா,**

நல்ல செய்தி கொண்டு வரலாமென்றுதான் கோட்டைகட்டி வந்தேன்; என் தந்தையின்முடிவை அறியக் காத்திருந்து காலத்தைக் கரைத்து வந்தேன், உன் ஆசைமுகம் காண. கடைசியில் என் கனவு பலிக்கவில்லை. நம் மணத்திற்கு என் தந்தை ஒப்பமறுத்துவிட்டார். தயவு செய்து என்னைக் குற்றவாளியாக்காதே. திரும்பவும் உன்னை நேரில் கண்டு இவ்விஷயத்தைச் சொல்ல மனம் தாளாமலே கடிதத்தில் எழுதுகிறேன். அந்த நாளில்—அதாவது, நம் முதல் சந்திப்பில் என்னவெல்லாமோ கூறினேன். சுந்தரக் கனவில் திளைத்தேன் புதையல் எடுத்த பொருள் போல. லைலா-மஜ்னு, ரோமியோ—ஜுலியட் ஆகிக் காதல் வாழ்வு தொடங்கக் கொண்டிருந்த ஆசை மடிந்துவிட்டது. என் பாக்கியம் அவ்வளவுதானோ?

**ரகுராமன்.**

* * *

ரகுராமன் கல்லூரி நண்பன் விமலாவிற்கு. ஒரே வகுப்பு என்ற ஒட்டுறவு. அந்த ஆண்டு விழாவிற்குக் கவியரசர் பாரதிதாசனின் 'எதிர்பாராத முத்தம்' நாடகத்துக்கு ஏற்பாடுகள் பிரமாதமாக நடந்தன. சந்தர்ப்பமோ அல்லது விட்டகுறை என்கிறார்களே, அந்தப் பந்தமோ இருவரையும் பிணைத்தது காதலர்களாக—ஆமாம்; நாடகத்தில்! ஒருவரையொருவர் துழாவியறிய ஏகப்பட்ட இடைவேளைகள் கைகொடுத்து உதவின. நாடகம் முடிந்த பிறகு ரகுராமனும் விமலாவும் 'ஜோடிப்புறு'வாக எண்ணினர். ஆனால்....!

* * *

நினைவுகள் கட்டுக்கோப்பற்ற ரீதியில் வலை பின்னின். விமலா பொருமினுள்; புரண்டாள். தன் நிலையையும் ரகுரா மனையும் சீர் தூக்கிப் பார்க்கலானுள். அவள் சுதந்திரக் கிளி. அவன் கூண்டுச் சிங்கம் தன் வீட்டைப் பொறுத்த மட்டில்.

ஆனுல், இதே விமலா என்ருே அவள் அத்தான் நர சிம்மனின் பூரண உரிமைக்கு இலக்காகி, மனைவியின் அங்கம் வகித்திருக்க வேண்டியவளே அல்லவா? நரசிம்மன் 'இண்டர்' பாஸ் செய்தவன். விமலா என்ருல் அவனுக்கு உயிர். அவளுடன் பேசுவது, பழுகுவது என்ருல் அவனுக் குத் தனி ஆசை. விமலாவின் சூழ்நிலையில் அவனுக்கு உலகமே ஓர் இன்பப் பூஞ்சோலையாகத் திகழ்ந்தது. அடி நாட்களில் மணல்வீடு கட்டி விளையாடுவார்கள். பின், பல் லாங்குழி—காசிப்பாண்டி—அப்புறம் 'ஸ்கிப்பிங்':— இப்ப டிப்பட்ட அமுதச் சூழ்நிலையே என்றும் அமைந்திருக்கக் கூடாதா?

"அத்தான்" என்பாள் விமலா.

"விமலா" என்பான் நரசிம்மன்.

மறுமொழி ஏதும் அவள் கூறமாட்டாள். நாணம் கற் பித்த புதுப் பாடமோ? வயதும் பருவமும் அவளை அழகு டன் இணைந்ததொரு அற்புதப் பாவையாக மாற்றின, பள்ளிப் படிப்பு—'எஜுகேஷன்'—நாகரிகம் மெருகு பூசப்பட்டிருந்தது அவளிடம். கவிஞனுக்குக் கவிக்கன்னி போன்ற ஈடுபாட்டுடன் அவனுள் அவள் இடம் பெற்ருள்.

ஆனுல், கடைசியில் ஏற்பட்ட விமலாவின் மனமாற் றம் நரசிம்மனைத் திகைக்க வைத்தது. ரகுராமனுடன் கனிந்த புதுத் தொடர்பு கண்டு அவன் துடித்தான்.

செய்தி டாக்டர் காதில் எட்டியது. தன் மகளின் கண்கலங்கச் சம்மதியாத டாக்டர், விமலாவின் எண்ணத்திற்குச் சம்மதம் கொடுத்தார். அதே சமயம் தன் மகளுக்காகக் காத்திருந்த நரசிம்மன் முகத்தில் மீளவும் எப்படி விழிப்பது என்பதாக அவர் மனச் சவுக்கு வளைத்துக் கொண்டது. ஆனால் டாக்டரின் இரண்டுங்கெட்டான் நிலைக்கு முத்தாய்ப்பிட்டது மாதிரி அன்றிலிருந்தே நரசிம்மன் அந்தப் பகுதியில் தட்டுப்படவில்லை.

* * *

விம்மலின் ஓலம் அறை முழுவதும் பரவியது. அப்போது வீட்டினுள் நுழைந்த டாக்டர் தன் மகளைக் கண்டதும் பதைத்துப் போய் "விமலா" என்றார். அன்பழைப்பிற்கு ஆதரவு கனிந்த பதில் அவளது பார்வை ஒன்றுதானா? அவள் விழிக்கோணத்தில் நீர்ச் சொட்டுகள் முத்தார்த்தன. கடிதத்தை நீட்டினாள் தந்தையிடம். படித்த டாக்டருக்கு மனம் வேதனைப் பட்டது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக முடிந்த தன் மகளின் எதிர்கால வாழ்வைப் பற்றிய சிந்தனையில் ஓடி நின்றது அவர் உள்ளம். அடுத்த நிமிஷம் தன் மருமகன் நரசிம்மனை நினைத்தார். நரசிம்மனுக்குத்தான் விமலா பிறந்திருக்க வேண்டுமென்பதாக எண்ணமிட்டார்.

"விமலா, சிறு குழந்தைபோல ஏன் அழ வேண்டும்? இப்போது ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. வாழ்வில் ஆசாபாசம் சிதையப்பெறுவதென்பது சாதாரணம்...... ........................விமலா, பாலைவனத்துச் சூழ்நிலையில் மாயத்தோற்றம் காட்டி ஏக்கத்தைக் கிளறும் கானல் நீரைப் போல, நிலையில்லாத நம் வாழ்க்கையிலும் இந்தக் காதல் மாயை செய்கிற வேதனைதான் எவ்வளவு? காதல்

மாயையின் வசப்பட்ட ஆண் பெண் இருவருமே தங்களுக்குத் தோன்றியவற்றை யெல்லாம் செய்துவிட்டு, அதன் விளைவுகளின் விபரீத முடிவில், தங்களையும் தங்கள் மாயக் காதல் லட்சியங்களையும் அழித்துக்கொண்டு விடுகிறார்கள்...............”

“அப்பா, அப்படியானால் காதல் மணம் புரிந்துகொண்ட ஆதரிச ஜோடிகளே இல்லையென்று தாங்கள் துணிந்து கூறிவிட முடியுமா, என்ன ?”

“விமலா, வாழ்வில் அனுபவத்தைப் பூரணமாக நுகராத இளம் மலர் நீ. உலகிலே மிகவும் அந்நியோன்யமாகத் தோன்றும் காதலர்களுடைய வாழ்வின் போலிப் பொலிவின் சின்னத்தைத்தான் நாம் பார்க்க முடிகிறது. காதல் மாயை அவர்களிடம் உற்பத்தி செய்துவிட்ட மாயத் தோற்றம் அது. காதல் மாயையினின்றும் பரிபூரணமாக விடுபட்டு, அதனின்றும் வகுத்துக்கொள்ளும் தனி வாழ்க்கைதான் லட்சிய வாழ்வு. அந்த வாழ்விலேதான் சத்தியமான மகிழ்ச்சியும், பொலிவும், பூரணமும் பரிணமிக்க முடியும்...............விமலா, சிறு குழந்தைபோல ஏன் இப்படி அழுகிறாய்? இப்போது ஒன்றும் தவறிப் போய்விடவில்லை...............நரசிம்மன்தான் நம் வீட்டு மாப்பிள்ளையாக வேண்டியவன்; பொறுமைசாலி. அவன் ஆசைக்குப் பங்கம் விளைவிக்க நினைத்தது எவ்வளவு தவறு சொல் விமலா, நாளைக்கே நரசிம்மனைத் தேடிப் பிடித்துத் திருமணத்துக்கு ஆவன செய்கிறேன்...........” என்று டாக்டர் ரமேஷ் ஆறுதல் கூறினார்.

இரண்டு மாதங்கள்:—நாட்கள் ஒவ்வொன்றும் ஆமை வேகத்தில் ஊர்ந்தன.

விமலா வேதனைப்பட்ட மனதை ரணமாக்கிக்கொண்டாள். ரகுராமனுடைய நிலையற்ற காதல் தனக்குப் படிப்பினையாக அமைந்தபோது, அன்று அவள் தன் அத்தான் நரசிம்மனின் காதலை உதறியது எத்துணை மடமை என உணரலானாள்.

காலத்தின் தேய்வுடன் ஒட்டி, ரகுராமனின் நினைவும் தேய்ந்து போகப் பழக்க முயற்சித்தாள் விமலா; ஆனால் இயலவில்லை. ரகுராமனுடன் பழகியது குறுகிய காலம் என்றாலும், அவர்களிடையே நிலவிய அன்பு பூரணத்துவம் பெற்றதாயிற்றே! காதல் ஓர் எழிற் கனவு! அப்படித்தான் அவள் வரையிலும் அது விளிம்பு கட்டிக் கண் சிமிட்டியது!

நரசிம்மனை மணப்பது பற்றி அவள் நோக்கத்தை அறிய முயன்றார் டாக்டர். விமலாவிற்கு அத்தானிடம் ஆசை நிறைய உண்டு என்றவரை அவர் தெரிந்துகொண்டார். அப்பொழுது எல்லையற்ற குதூகலம் டாக்டருக்கு உண்டாயிற்று.

தற்சமயம், விமலா தன் இதய பீடத்தில் நரசிம்மனைக் கொலுவீற்றிருக்கச் செய்தாள். தன் அத்தானோடு பேசிப் பழகிய நாட்களை மீளவும் எண்ணிப் பார்ப்பதில் தனியின்பம் கண்டாள் அவள். கற்பனையில் தோற்றுவித்த உருவத்தைப் படுதாவில் தீட்டும் தருணம், திரும்பவும் அதே உருவத்தை நினைத்துப் பார்க்கும் ஓவியனைப் போன்று, விமலா, தன் அத்தானின் நினைவு முகத்தை ஆசை முகமாக்கி அடிக்கடி நினைத்துப் பார்த்தாள்.

அதுவரை நரசிம்மனைப் பற்றி யாதொரு தகவலும் கேட்டறியாத அவளுக்கு இனமறியாத ஏக்கம் இதயம் பூராவிலும் ஊடுருவியது ; பரவியது.

ரேடியோவைத் திருப்பினாள். இசைத்தட்டுகள் ஒலி பரப்பப்பட்டன. 'எண்ணி எண்ணிப் பார்க்க மனம் இன்பம் கொண்டாடுதே' என்று அலறியது—அல்ல, கானம் இசைத்தது. இன்பம்!—விமலாவிடமிருந்து நெடுமூச் சொன்று புறப்பட்டது.

"விமலா"

"அங்கயற்கண்ணி, வா"

அவளும் விமலாவும் ஒரு வயதுப் பெண்கள். தன் அத்தானின் கைப்பிடித்து வாழ்க்கையில் புகுந்த அங்கயற் கண்ணிக்கு எத்துணை உள்ள நிறைவு! எவ்வளவு உவகைப் பூரிப்பு! தாம்பத்யத்தின் விளைபொருள்களோ இவை ?

"விமலா...ஏன் ஒரு மாதிரி இருக்கிறாயே ?"

"ஒன்றுமில்லை; எங்கே இப்படிப் புறப்பட்டாய்?"

"இன்றைக்கு முனிசிபல் ஹாலில் ஏதோ புரட்சி நாடக மாம்- பட்டணத்திலிருந்து வந்திருக்கிறதாம் கம்பெனி. என்னை வரச்சொல்லிவிட்டு அத்தான் ஏதோ வேலையாகப் போய்விட்டார். நீ வருகிறாயா?"

நாடகம் என்றதும், அன்று அவளும் ரகுராமனும் நடித்த நாடகத்தின் நினைவு புரையோடிய அவள் மனத்தில் புகுந்து செல்லரித்தது.

"கயற்கண்ணி, நீ போய்வா. எனக்கு உடம்பு சுகமில்லை"

தன் தோழியை அனுப்பிவிட்டு, அறையில் வந்து அமர்ந்த விமலாவிற்குத் திரும்பவும் பழைய நிகழ்ச்சிகள் சங்கிலிக் கோர்வை பின்னின, தண்ணீரில் அமுக்கிவிட்ட

ரப்பர்பந்து மீண்டும் நீர்ப்பரப்பில் எழும்பி வருவதுபோல். துக்கம் நெஞ்சை இறுக்கியது விமலாவிற்கு, கடந்தகாதல் நினைவுகள் அவள் பேதை உள்ளத்தினைக் கசக்கிப் பிழிந்த காரணத்தால்!

அவளுக்கு அச்சமயம் வேண்டியிருந்தது மனச் சாந்தி. காற்றுட வெளியில் போய்வரலாமா என்று எண்ணினாள். ஊஹும்! அந்தக் கதைப் புத்தகம்—அமிர்தம்—மனமில்லை. அப்புறம்.............?

'ட்ரே'யில் இருந்த காப்பியை அருந்தினாள். நாடகத் தின் நினைவு அவளை உறுத்தியது போலும்! முகம் பார்க்க வில்லை; அழகு சேர்க்கவில்லை. இருந்த நிலையிலேயே புறப் பட்டாள் விமலா.

நாடகக்கொட்டகையை அடைந்தவுடன், விமலா மூன் றும்பேருக்குத் தெரியாமல் தனியாக ஒரு இடத்தில் போய் நின்றாள். அவள் மருண்ட பார்வை சுற்றி வளையமிட்டது. இருளைச் சவுக்கடிக்கும் மின்னல்போல, அவள் பார்வையில் ஒரு காட்சி பட்டது. கண்களைத் தீட்டிக்கொண்டு கூர்ந்து நோக்கிய விமலா ஒருகணம் சிலையாய்ச் சமைந்துவிட்டாள்.

'யார்? அத்தான் நரசிம்மனு'—நரசிம்மனை அந்த இழிவான கோலத்தில் காணவும் விமலாவிற்குப் புவனமே புரண்டது.

'ஐயோ, கடைசியாக நான் வைத்திருந்த ஆசையும் நிறைவேறவில்லையே' என்று ஏங்கிப்போனாள் அவள்.

'நரசிம்மன் பைத்தியம்தான்; சந்தேகமில்லை. கிழிந்த சட்டை; க்ஷவரம் செய்யப்படாத மலர்ச்சி மறைந்து சோம்பிய முகம். புத்தி சுவாதீனமிழந்து விட்டதா? ஏன்? நான் அவருடைய மாருத அன்பைப் போற்றுதிருந்து

விட்ட குற்றத்திற்குத் தண்டனையா அவருடைய இந்தக் 'கோலம்?' என்று பலவாறு யோசித்த விமலா, தன் அத்தானிடம் நேரில் போய்ப் பேசலாமா என்று ஆசைப்பட்டாள். மறுமுறையும் அவள் அவனை விழித்துப் பார்த்தாள். நரசிம்மனும் அவளை நிமிர்ந்து நோக்கினான். விமலா பார்வையைத் திசை திருப்பினாள். ஒரே மக்கள் திரள். நாடகம் ஆரம்பிக்க வேண்டிய நேரம்.

அத்தானை அந்தக் கோலத்தில் போய்ப் பார்க்கச் சிறிதும் சம்மதமில்லை விமலாவிற்கு.

'நரசிம்மன்.'

பெயரை உச்சரித்தாள். 'பைத்தியம்' என்ற எதிரொலி கிளம்பியது. அதே விநாடி, நரசிம்மனை மணப்பதெனக் கொண்டிருந்த தன் ஆவலை அழித்துவிட்டாள் விமலா. பின், அவள் கதி.........?

பூவினும் மென்மை வாய்ந்தது பெண்களின் இதயம் என்கிறார்களே, ஒரு வேளை விதிவிலக்காக விமலாவின் இதயம் மட்டும் கல்லாகி விட்டதா......?

நாடகம் பார்க்காமல் அவள் வீட்டை நோக்கி நடந்தாள்.

அவள் விமலா—பெண்! அவள் உள்ளத்தில் ஊழிப் புயல் வீசியடித்தது; காலவெள்ளம் குமுறி ஓடியது; அந்திம எரிமலை வெடித்துச் சிரித்தது!

* * *

அடுத்த வாரம் விமலாவின் பேருக்குத் திருமண அழைப்பு ஒன்றும், அத்துடன் தபால் ஒன்றும் வந்தன நரசிம்மனிடமிருந்து. கல்யாணப் பத்திரிக்கையைக் கண்டதும் திகைத்துவிட்டாள் அவள். 'அத்தானுக்குக்

கல்யாணமா ?' என்ற கேள்வி அவளது மன ஆழத்தைத் தொட்டுக் கிளம்பிற்று விடைதேடும் பாவனையில். ஆம்; அவள் அத்தான் நரசிம்மனுக்குத்தான் திருமணம் !

கடிதம் பேசுகிறது.

அன்புள்ள விமலா,

அன்றைக்கு உன்னை நாடகக்கொட்டகையில்—அதுவும் நான் இருந்த அங்கிலேயில் சந்திக்க நேரிடும் என்று கனவில்கூட எண்ணவில்லை. இடைவேளைப் பிரிவின் பின் ஏற்பட்ட பாசம் உன்னுடன் ஒரு வார்த்தையாகிலும் பேசித்தான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குக் கட்டுப்படுத்தியது. ஆனாலும், நான் இருந்த அந்த வேஷத்தில் எனக்கே உன் முகங்காண வெட்கமாயிருந்தது. அன்று நடந்த 'காதல் மாயை' நாடகத்தில் பைத்தியக்காரன் பாகம் என்னுடையது. அவசர காரியமாக அதுசமயம் வெளியே வந்தேன். உன் சந்திப்புக் கிட்டியது. ஒருக்கால் நீ கூட என்னை ஒரு பைத்தியம் என்றுதான் தீர்மானித்திருப்பாயோ என்றுகூட அஞ்சினேன்; அஞ்சுகிறேன். எனக்குக் கல்யாணம். அவசியம் வந்துபோ அன்புக் கோரிக்கை இது !

நரசிம்மன்

மாப்பஸானின் பிரித்திருந்த புத்தகத்தைக் கண்ணோட்டமிட்டாள். 'வாழ்க்கை மக்கள் எண்ணுவது போல் அவ்வளவு நல்லதாகவோ, கெட்டதாகவோ அமைவதில்லை'....அவள் கண்கள் கலங்கின.

அதே சமயம், "விமலா" என்றவாறு அவள் தந்தை உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும் கலங்கிய கண்களைத் துடைத்து விட்டு "அப்பா" என்றாள் விமலா.

"விமலா, உள்ளே வந்துபார். உனக்கு அதிசயம் காத்திருக்கிறது அதிருஷ்ட வரிசையுடன்."

போய்ப் பார்த்த அவளுக்குத் தன் கண்களை நம்பவே முடியவில்லை. அன்று தன் காதலுக்குப் பாத்தியதை கொண்ட ரகுராமனை மறுபடியும் அவள் பார்ப்பாள் என்று அவளால் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

"விமலா, நீ பாக்கியசாலிதான். ரகுராமன் இனி உன் துணைவர். அவர் மீண்டும் இங்கு வந்ததே ஒரு பெரிய கதை. தன் திருமணத்திற்கு அவர் தந்தை மறுத்ததும் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாராம். கடைசியில் செய்தி பூராவையும் நரசிம்மன் கேள்விப்பட்டு, எப்படியும் நீ மனதில் வரித்த ரகுவையே உனக்குக் கணவனாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு காரிய சித்தியும் பெற்றுவிட்டான். உன் மகிழ்ச்சியைத் தன் இன்பமாக—லட்சியமாகக் கருதுகிறான் அவன். நரசிம்மனுக்குக் கல்யாணம்; உன் அத்தானின் துணைவியாகப் போகிறவள் யார் தெரியுமா? அது நம் ரகுவின் தங்கை!" என்று வழிந்தோடும் ஆர்வத்துடன் கூறினார் டாக்டர்.

இருண்ட தன் வாழ்வில் அருணோதயம் பூக்கச்செய்த தன் அத்தானை நினைத்துப் பெருமை கொண்டாள் விமலா. விழிப்பின் வருகை அவர்களது எதிர்கால வனப்பிற்கு வரவேற்பு மொழிந்தது. தாபம் சுழித்தோட விமலாவை நிமிர்ந்து பார்த்தான் ரகு. நாணம் பெண்மையுடன் சங்கமிக்க, அழகில் வசந்தம் மருவிய அவள் முகத்தில் உதயத்தின் செந்தூரம் ஒளி வீசியது!

ஆனால்..............?

* * *

நரசிம்மனின் கல்யாணம் காஞ்சனாவுடன் விமரிசையாக நடந்தது. தங்கப் பதுமை போன்றவளைத் துணைவியாகப் பெற்ற அத்தானின் பாக்கியத்தை வாழ்த்தினாள் விமலா. காஞ்சனாவுடன் பேசிப் பழகத் துடித்தது அவள் பெண் நெஞ்சம். முன்பின் தெரியாதவளுடன் எந்த விதத்தில் பேச்சைத் தொடங்குவது என்ற கூச்சம் வேறு; சமாளித்துக்கொண்டு காஞ்சனாவை அண்டினாள் விமலா. புன்னகையுடன் பதிலுக்குக் காஞ்சனாவும் முறுவலித்தாள்.

"காஞ்சனா"

"............"

"காஞ்சனா"

இரண்டாம் அழைப்புக்கும் பதில் இல்லை. விமலாவிற்கு என்னவோபோலாகிவிட்டது. அன்புடன் பேச நினைத்த அவளுக்குக் காஞ்சனாவின் மௌனம் திகைப்பை யூட்டியது. அப்போது, தற்செயலாகப் பிரவேசித்த நரசிம்மன் அவ்விருவரின் நிலையை ஊகித்தவன்போல விமலாவிடம் நெருங்கினான்.

"விமலா, நீ அறியமாட்டாய் ரகசியத்தை. காஞ்சனா ஒரு ஊமை. அழகே வடிவமான அவள் பேசாமடந்தையாகப் படைக்கப்பட்டவள். சிருஷ்டியின் சிக்கலா இது? காஞ்சனாவின் கல்யாணம் முடிந்ததும்தான் ரகுவைப் பற்றி யோசிப்பது என்று உறுதியாகச் சொல்லிவிட்டாராம் அவர்கள் அப்பா. அப்போதுதான் ரகுவின் மறைவு

பற்றியும் நான் அறிந்தேன். அதே தருணம், உன் அன்பிற்குப் பாத்திரமான ரகுவை உன் துணைவராக்கவும் உறுதி பூண்டேன். உன் இன்பமே என் உயிர்; உன் வாழ்வே என் வையம்; உன் கனவே என் லட்சியம்; அதன் பலன் காஞ்சனா எனக்குக் கிட்டினாள்; ரகுவை நீ அடைந்தாய்! விமலா, இனித்தான் உங்கள் கல்யாணத்திற்கு ஆயத்தம் செய்யவேண்டும். வரட்டுமா ?" என்று கூறி விடைபெற்றான் நரசிம்மன்.

பதுமையாக நின்ற விமலாவிற்கு அப்பொழுது "அத்தான்..............அத்தான்" என்று வாய்விட்டுப் புலம்புவதைத் தவிர வேறொன்றும் தோன்றவில்லை!

*மறுகணம், முத்துலிங்கம் பூங்காவ னத்துடன் காற்றாய்ப் பறந்தான், மணமாலை தாங்கி நின்ற சம்யுக்தை யைக் குதிரையில் ஏற்றி வைத்துக் கம்பீரமாகப் பறந்தோடிய பிருதிவி மன்னனைப்போல!*

# பாசம் வென்றது

கைகளால் கன்னத்தைத் தாங்கியவண்ணமிருந்த பூங்காவனத்தின் காதுகளில் கொஞ்ச நேரத்துக்கு முன் அஞ்சலை கூறிப்போன வார்த்தைகள் தாம் எதிரொலித்த வாறிருந்தன. அஞ்சலை தன்னுடன் பேசினபொழுது அவள் வார்த்தைகளில் தொனித்த கர்வத்தையும், முகத் தில் படர்ந்திருந்த பெருமிதத்தையும் எண்ணிப் பார்க்கத் துயரம் மேலோங்கி நின்றது பூங்காவனத்துக்கு.

பொங்கலுக்கு இன்னும் ஏழெட்டு நாட்களுக்கு அதிகமா யிருந்தும், அதற்குள் அஞ்சலையின் தகப்பன் தன் மகளை யும் மாப்பிள்ளையையும் தாய் வீட்டுக்கு அழைத்துப்போக வந்துவிட்டான். ஆனால் அவளைப்போல தானும் பிறந்த வீடு போக முடியவில்லையே என்றுதான் அப்படி ஆத்திர மடைந்து போனாள் பூங்காவனம். ஏனென்றால், ஒருசில

தினங்களுக்கு முன்னர் பூவைமாநகருக்குப் பொங்கலுக்குப் போவது குறித்து அவள் பிரஸ்தாபித்த சமயம், அவள் கணவன் அங்கு போகக்கூடாதென்று திட்டமாகச் சொல்லி விட்டான். அப்போதே அவள் மனமிடிந்து போய்விட்டாள்.

"ஏலே, எந்திருச்சிச் சோறு போடு!"

தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்து உதறித் தோளில் போட்டுக்கொண்டு ஒய்யாரத்துடன் உள்ளே நுழைந்தான் முத்துலிங்கம்.

"போய்ச் சட்டியை எடுத்துக்கிட்டு வந்து உட்காரு வேன்! இதுக்குக்கூட ரொம்ப ரோசனையாயிருக்குதோ!" என்றுசீறி விழுந்தாள் பூங்காவனம்.

தனக்கு இருந்த பசியில் அவள்பேச்சுக்கு மறு வார்த்தை சொல்லாமல் போட்டதைச் சாப்பிட்டு எழுந் தான் முத்துலிங்கம்.

"பூங்காவனம், கொஞ்சம் வெத்திலைச் சருவுணுச்சும் கொடேன்!"

சூடேறிய அவளது கோபத்தைத் தணிப்பவன் போல மிக அன்புடன் கெஞ்சினுன் அவன்.

"ராசா வந்துட்டாருன்னு அவசரமா ஓடியாந்து தர வேண்டியதுதான். புள்ளே அழுகிறதுகூட ஒன் காதுக்குக் கேக்கலையா?"

அவளது ஒவ்வொரு காரியமும் இப்படி வேண்டா வெறுப்புடன் செய்யப்பட்டதை அப்போது முத்துலிங்கம் தீர உணர்ந்துதானிருந்தான்

உண்மையாக அவ்விரு தம்பதிகளுக்கும் மனக்கசப்பு உண்டாகி இரண்டு மூன்று வாரங்களுக்கு மேலாகிவிட்

டது. அதுவும் 'பிடாரித் திருவிழா' வைப் பற்றி அன்று ஒரு தினம் யாரோ பேசியதைக் கேட்டதிலிருந்து அவளுக்குத் தன் புருஷன் மீதிருந்த ஆத்திரம் வளர்ந்ததே யொழியக் குறைந்தபாடில்லை.

தன் தந்தையைக் காண ஊருக்குப் போக இயலாம லிருப்பதற்குத் தன் கணவனே காரணம் என்பதை அறிந்துகொண்ட பூங்காவனத்தால் அவனை வெறுக்காமல் இருக்கமுடியுமா?

ஆனால், அவள் பேதை உள்ளம் தன் கணவனது மன இயல்பைக் கொஞ்சமேனும் ஆராய்ந்தறிந்ததுண்டா?

கல்யாணம், காட்சி என்று ஏற்பட்டு சுபவேளையில் பூங்காவனத்தை முத்துலிங்கம் கைப்பிடித்திருந்தால், ஒருபோதும் அவள் தாய் வீடு செல்வதற்கு மறுத்துப்பேசி யிருக்கமாட்டான். அந்த இரண்டு வருஷத்திற்குள் ஒவ் வொரு தேவைக்கும் திருநாளுக்கும் குடும்ப சகிதமாக மாமன் வீடு சென்று திரும்பி யிருப்பான் முத்துலிங்கம்.

ஆனால், முத்துலிங்கம் அவளை அடைந்த விதம் வேறு. அப்படியிருக்கையில் தன் மாமன் கண்களில் எப்படி விழிப் பதற்கு மனம் வரும்? இந்த ஒரே ஏக்கம்தான் அவன் மனத்தை வேதனையிலாழ்த்தி வந்தது.

* * *

பிடாரித் திருவிழா என்றால் பூவைமாநகரில் வெகு பிர சித்தம். பொங்கல் புது நாளில் புது உடை தரித்து நிற் கும் ஜனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியாது. தேர், திருவிழா ஒருபுறமிருக்க, 'கரகம்' விளையாடும் பகுதி

மிகவும் வேடிக்கையாயிருக்கும். அதைப்பார்க்கவேண்டியே பொழுது சாயும்வரை கூட்டம் கலையாதிருக்கும். அதிலும் முத்துலிங்கம் கரகம் எடுத்து ஆடுகிறுனென்றுல் கூட்டத்துக்குக் கேட்க வேண்டியதில்லை.

இளம் வயது; இடையில் மஞ்சள் வேஷ்டி; உடல்முழுவதும் பூமாலைகள்; நெற்றியில் பட்டை பட்டையாக விபூதி; தலைக் கொண்டையில் பூக் கும்பல். அலங்காரம் பண்ணப் பட்ட குடத்தை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு கையில் பிரம்புடன் ஒயிலாட்டம் ஆட எத்தனித்தான் முத்துலிங்கம்.

அந்தச் சமயம் தன்னை இமைகொட்டாமல் கவனித்து ரசித்து நிற்கும் ஒரு ஜீவனையும் பார்த்துவிட்டான். அது தான் பூங்காவனம். ஏற்கெனவே அவள்மீது முத்துலிங்கத்துக்கு ஒரு 'கண்' உண்டென்பது என்னவோ வாஸ்தவம் தான். அந்த ஊருக்கு என்றுவது வரும்போது, சொல்லி வைத்தாற்போல பூங்காவனம் அவன் கண்களில் தட்டுப் பட்டுக்கொண்டுதானிருப்பாள். ஓரிரண்டு தடவை நேருக்கு நேர் பேசியதும் உண்டு. மேலும் பூங்காவனம்தான் அந்தச் சுற்று வட்டாரத்துக்கு அழகியும்கூட. சௌந்தர்ய தேவதையின் பூரண கடாட்சம் கன்னிப் பருவமடைந்த அவள் கோமள மேனியில் பரிபாலித்திருக்கையில் அழகிற்கு என்ன குறை?

முத்துலிங்கத்துக்கு மகிழ்ச்சி பிறக்கவே அவன் ஆட்டம் அன்று பிரமாதமாக அமைந்துவிட்டது. முகத்தில் வெற்றிப் புன்னகை தோன்ற ஒருமுறை கூட்டத்திலிருந்த பூங்காவனத்தைக் கவனித்தான்.

ஆட்டம் முடிந்ததும் கூட்டம் கலைந்தது. வேஷத்தைக் கலைத்துவிட்டுக் கொண்டிருந்த அவன் பின்னால் ஏதோ அரவம் கேட்டுத் திரும்பினான். வாடிய முகத்துடன் கண்ணீரும் கம்பலையுமாக நின்றுகொண்டிருந்தாள் பூங்காவனம்.

"பூங்காவனம், எதுக்கு இப்படித் திடீர்னு கண் கலங்கிறே?" என்று கேட்டான் முத்துலிங்கம்.

"மச்சான், ஒங்களுக்கு விசயம் தெரியாதா? சூதாடி முருகனுக்கு என்னைக் கண்ணாலம் செஞ்சு கொடுக்கப் பரிசம் போடப் போறாங்க வருகிற கிழமை. அந்தப்பய மவங்கிட்டே எப்படி—"

அவள் அழாத குறையாகக் கூறும் விதத்திலிருந்து விஷயத்தை ஊகித்து விட்டான் அவன்.

"அப்படியின்னா...... பூங்காவனம் என்னைக் கட்டிக்க—" என்று தனக்குள் ஒரு முறை நினைத்துப் பார்த்துக் கொண்டான். முத்துலிங்கத்துக்குச் சந்தோஷம் நிலை கொள்ளவில்லை.

"அப்படின்னா என்னோடு வரத்துக்கு சம்மதந்தானா?"

"மச்சான், இப்பவே கண்காணாத ஊருக்கு எங்காச்சும் ஓடிடவேணும்! இல்லாட்டி எங்கப்பன் கண்டா தலையைச் சீவிப் போட்டிடுவாரு!"

மறுகணம், முத்துலிங்கம், பூங்காவனத்துடன் காற்றாய்ப் பறந்தான், மணமாலை தாங்கிநின்ற சம்யுக்தையைக் குதிரையில் ஏற்றிவைத்துக் கம்பீரமாகப் பறந்தோடிய பிருதிவி மன்னனைப்போல!

* *

காலம் என்னும் நீர் வீழ்ச்சியில் அவர்கள் வாழ்க்கையும் சிதறி ஓடிற்று.

பூங்காவனம் ஒரு குழந்தைக்குத் தாய் ஆனாள். எத்தனையோ முறை தேர் திருநாளுக்கு வண்டி வைத்துக் கூட அழைத்துச் சென்றிருக்கிறான் முத்துலிங்கம் தன் மனைவியை. தன்பேரில் தன் நாயகன் கொண்டுள்ள அப் பழுக்கற்ற அன்பையும் அவள் உணராமலில்லை.

அங்கு வந்த இரண்டு வருஷத்திற்குள் தன் தந்தையைக் காணவேண்டுமென்று தவித்திருக்கின்றாள் பூங்காவனம். அப்போதெல்லாம் தன் தகப்பன் கண்ணில் திரும்பவும் போய் எவ்விதம் விழிப்பது என்று நினைத்துத் தன் மனத்தில் தோன்றியெழுந்த ஆசைகளுக்கு முடிவுகட்டிவிடுவாள்.

ஆனால் காரணம்என்னவோ, இந்த நாலைந்து மாதமாக தந்தையின் முகத்தை எப்படியும் கண்டுவிடவேண்டும் என்ற அந்த ஒரே ஆசை மட்டும் சதா அவள் பெண் மனத்தை அரித்துவிட்டது. சிறு வயதிலேயே தாயை இழந்த பூங்காவனத்திற்குத் தந்தையின் ஸ்தானத்துடன் தாயின் ஸ்தானத்தையும் சேர்ந்து வகித்தவனல்லவா அவள் தகப்பன் ?

* * *

“அப்படியானா நான் ஒங்ககூட வரக்கூடாதா திருநாளைக்கு? திருவிழா முடிஞ்சதும் கரகம் ஆடுறதைக் கூடப் பார்க்க வேணும். உடனே கிளம்பிடுவோம், மச்சான்!”

“பூங்காவனம், இன்னமும் சின்னப்பிள்ளையா நீ. எதுக்கு இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாய்? இந்தாப் பாரு! வருகிற நிலாவுக்கு நம்மூரிலே ‘மயான காண்டம்’ நாடகமாம். அதுக்குச் சோடியாப் போவலாம்”.

முத்துலிங்கம் இவ்விதம் சொல்லி நடையைக் கட்டிவிட்டான். திருவிழாவிற்குப் போனால் தன்னைத் தன்மாமன் எங்கே அடையாளம் தெரிந்துகொள்ளப் போகிறான் என்ற தைரியத்தில்தான் அவ்வளவு சுதாரிப்பாகக் கிளம்பி விட்டான் அவன்.

கிளம்பும் சமயம் இருந்த தைரியம், சந்தோஷம் அனைத்தும் ஊர் நெருங்க நெருங்க மறையத் தொடங்கின.

"ஐயோ, புள்ளையோடே அவளையும் கூட்டிக்கிட்டு வந்தா கிழவன் தலையையா சீவிப்பிடுவாரு? என்ன அசட்டுத்தனம்!'' என்று ஒவ்வொருமுறை குறைபட்டுக் கொண்டான் முத்துலிங்கம்.

சுற்றிலும் நோக்கினான். அதே கரகம் விளையாடின இடம்!

''அண்ணே, அந்த விசிறியைக் கொஞ்சம் கொடுவேன். பூசாரி மயக்கம் போட்டு விழுந்திட்டாரு!''

இதைக் கேட்டதும் திடுக்கிட்டு விரைந்தோடினான் முத்துலிங்கம். ஒரே கும்பல்.

உற்றுப்பார்த்தான் முத்துலிங்கம். தரையில் பூங்காவனத்தின் தகப்பன் மூர்ச்சையுற்று வீழ்ந்து கிடந்தான்.

அவசரமாக ஓடித் தண்ணீர் கொண்டுவந்து கிழவன் முகத்தில் தெளித்து விசிறினான்.

சற்று நேரம் கழித்து, கிழவன் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான். முத்துலிங்கத்துக்கு வெட வெடத்தது. ஒருவேளை கிழவன் தன்னை அடையாளம் கண்டுவிட்டால் என்ன செய்வது என்று பயந்து போனான்.

"தம்பி, உனக்கு ரொம்பவும் புண்ணியம் கிடைக்கும். மாரியாத்தா ஒனக்கு ஆயுசைப் பெலமா எழுதிப் போட

ணும்! இந்தச் சமயத்திலே என் பெண்ணு பூங்காவனம் இருந்தால்—" என்று புலம்பினான் கிழவன்.

திடீரென்று "அப்பா" என்ற குரலைக் கேட்டு "என்ன பூங்காவனமா?" என்று அலறினான் பூசாரி. அவன் கை, கால்கள் நடுங்கின. கொவ்வைப் பழம்போல சிவந்துவிட்டன கண்கள்.

"கள்ளி, என்ன நெஞ்சழுத்தம் ஒனக்கு. ஒங் கள்ளப்புருசன் எங்கே?" என்று கூறிக் கையில் தடியை எடுத்தான்.

பூங்காவனத்தின் பார்வை முத்துலிங்கம் பக்கமாகச் சாய்ந்தது. கிழவன் ஒருகணம் ஸ்தம்பித்துப் போனான்.

"நீயா அவள் புருஷன்? ஒனக்குப் புத்தியில்லே!"— கிழவனின் வார்த்தைகள் குமுறிப் புரண்டன, அடிவானத்தில் வெடித்தெழுந்த இடிமுழக்கம்போல.

* * *

அலறிப்புடைத்தவளாய் விசித்தெழுந்தாள், பூங்காவனம். கண்களைத் துடைத்துக்கொண்டு விழித்துப் பார்த்தாள். அப்போதுதான் அவளுக்கு உயிர் வந்தது. இவ்வளவு நேரம் கண்டது வெறும் கனவுதான் என்பதை உணர்ந்தபோது அவளுக்கு நிம்மதி ஏற்பட்டது. ஆனால் கனவு பலித்துவிட்டால்—?

"ஏலே என்ன இப்படிச் சும்மா குந்திக்கிட்டிருக்கே!"

"மச்சான் திருநாளுக்குப் போனிங்களே. அதுக்குள்ள திரும்பிட்டிங்களே!"

"பூங்காவனம், ஒங்க அப்பனைக் காணவேணுமின்னு ரொம்ப துடியாய்த் துடிச்சுப் போனியே இவ்வளவு

ளாளாக !" என்று முத்துலிங்கம் சொல்லி முடித்ததும அவள் முன்நின்ற தன் தகப்பனைக் கண்டதும ஒன்றுமே தோன்றவில்லை பூங்காவனத்திற்கு.

"பூங்காவனம், பெற்று வளர்த்த மகளை இந்த இரண்டு வருஷமாக் காணுத என்னை மன்னிச்சுப்புடு. மாப்பிள்ளையை வழியில் கண்டதும் என் மனசு குளிர்ந்து போச்சு. ஆனு என் யோசனைப்படி ஒன்னை அந்தச் சூதாடிக்குக் கட்டிக்கொடுத்திருந்தா, நீ கண் கலங்கிக்கிட்டுத்தான் இருந்திருக்கணும். ஒனக்குச் சேதி தெரியாதா? அந்தப் பயமவன் சூதாடி இப்போ ஜெயிலிலே அடைபட்டிருக்கான். எல்லாம் ஆத்தாள் கிருபைதான். இப்பவே கிளம்பணும் ஊருக்கு. ஊம், புள்ளையை எடுத்துக்க !" என்று துரிதப்படுத்தினுன் கிழவன்.

கொஞ்ச நாழிகை முன்பு தான் கண்ட கனவு நினைவிற்கு வந்ததும், பூங்காவனத்திற்குச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. 'களுக்' கென்று சிரித்துவிட்டாள். அவளுடன் சேர்ந்து முத்துலிங்கமும் சிரிக்க ஆரம்பித்து விட்டான் !

"குமார், தங்களது இதயபீடத்தில் ஜூபேதாவுக்கு என்றும் ஓர் இடம் நிலைபெறச் செய்வீர்களல்லவா?"
"ஜூபேதா, நீலவாணைப் பற்றி நிறைமதிக்கு நினைவில்லாதிருத்தல் எங்ஙனம் சாத்தியம்?"

# நீறுபூத்த நெருப்பு

பால் வழியும் நிலவொளியில் ரம்மியமான ஐராவதி நதியின் எழில் அப்பிரதேசத்தை மிக்வும் சுந்தரமாக்கிக் கொண்டிருந்தது. வானத்துக் கீழ் எல்லையை வெட்டிப் பாய்ந்து உதயமான பூர்ண சந்திரனின் வெண் கிரணங்கள் நீரில் மூழ்கி யெழுந்து அலைக் குமிழிகளின் நுனியில் தோன்றிக் கண் சிமிட்டின. வெண்மதியின் பின்னணியில் அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது ஐராவதி நதி, நீலநிறப் பட்டாடை அணிந்து நடை பயிலும் நவ யௌவன மங்கைபோல!

நீலம் பரந்த நீர்ப்பரப்பின் சூழ்நிலையில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது 'ஜலகோபால்'. அமுத இளங் கதிர்கள் பொன்மயமாக அதன் மீது பட்டுக் கண்ணைப் பறிக்கும் பிரகாசமும் பளபளப்பும் பெற்றன.

ரங்கூன் துறைமுகத்தில் தாவள்யமான நிலவில் மின்னித் தளிர்த்த மணல் வெளியில் ஒரே ஜனத்திரள். நீண்ட காலமாகப் பிரிந்திருந்த தமது தாய்நாடு நோக்கிச் செல்லும் மக்களின் உள்ளங்கள் குதூகலத்தாலும் ஆவலாலும் மலர்ந்து காணப்பட்டன. அவர்களை வழியனுப்பக் குழுமியிருந்தனர் இன்னும் சிலர்.

மணிக்கூண்டில் பத்தடித்து நின்றது. மக்கள் கலைந்து கப்பலில் ஏறுவதில் முனைந்தனர்.

"ஜுபேதா, கூடிய சீக்கிரம் புறப்பட்டு வந்துவிடுகிறேன். பெற்றெடுத்த அன்னையின் இன்முகம் காண வேண்டுமே என்ற அந்த ஒரே சபலம்தான் என் பயணத்திற்கு அடிகோலியது. நாம் சந்தித்து ஒருமனபபடச் செய்த அதே விதி மீளவும் நம் இருவரையும் ஒன்றுகூடச் செய்யட்டும். சஞ்சலப்படாதே. நாட்களை விரல் விட்டு எண்ணிக்கொண்டிரு."

குமாரின் வார்த்தைகளில் துயரம் சுருதி கூட்டியது.

"குமார், தங்களது இதயபீடத்தில் ஜுபேதாவுக்கு என்றும் ஓர் இடம் நிலைபெறச் செய்வீர்களல்லவா ?"

"ஜுபேதா, நிலவானைப்பற்றி நிறைமதிக்கு நினைவில்லாதிருத்தல் எங்ஙனம் சாத்தியம் ?"

ஜுபேதா ஓர் முறை தன் கண்களை மலர விழித்துக் குமாரை ஏறிட்டு நோக்கினாள். அவள் நயனச் செம்புகள் நீரை வார்த்தன.

"ஜுபேதா" என்று அன்புமேவிய குரலில் அழைத்து' மெதுவாகக் கலைந்து கிடந்த அவளது கேசத்தை விலக்கி விட்டான் குமார். கார்முகிற் கூட்டத்திடை கண் சிமிட்

டும் வளர்பிறைபோல விரித்துப் பின்னியிருந்த கூந்தலுக் கிடையில் ஜுபேதாவின் எழில்நிறை வதனம் காட்சியளித்தது.

கப்பல் புறப்படுவதற்கு அறிகுறியாக மணியடித்தது.

"ஜுபேதா, நான் போய் வருகிறேன். உன் அம்மாவிடம் சொல்" என்றுகூறி அவளது நடுங்கும் நளினக் கரங்களில் தன் நினைவின் சின்னமாக அன்பு முத்திரையிட்டான் குமார்; அவன் கண்களில் நீர்ப்படலம் விரிந்தது.

## 2

ரங்கூனில்தான் ஜுபேதா—குமார் நட்பு, சந்திப்பு நிகழ்ந்தது. ஒன்றுபட்ட இரு உள்ளங்கள் ஒட்ட ஆரம்பித்தன. நட்பு பின் காதலாக மாற, அப்புறம் காதல் செடி பண்பட்டது. இதயம் ஊடுறுவும் கனிவுப் பார்வைகள், மனமுவந்த பேச்சு வார்த்தைகள்—இப்படிப் பல சந்தர்ப்பங்கள் நிகழ்ந்தன; முடிந்தன. பிறகு மீண்டும் துவங்கின. பின் கேட்பானேன்?

அன்று மலாய் வாசிகளின் முக்கிய பண்டிகையான 'அஜ்ஜி' திருநாள்!

குமார் அன்றும் அந்த அறைக்குச் சென்றான். அவன் ஆடை அலங்காரம் அற்புதமாகயிருந்தது. அறையினுள் அடியெடுத்து வைத்த குமாரைக் கண்டதும், 'நமஸ்தே' சொல்லி "உட்காரவேண்டும்" என்று உபசரித்தாள் ஜுபேதா. மார்புடன் ஒட்டி இழைந்தோடியிருந்த மேலங்கியின் இருபுறங்களிலும் கூந்தலின் இரண்டு பின்னல்களும் பிரிந்திருந்தன. தனிப்பட்ட காந்த இழைவு அவள் தாமரை முகத்தில் மின்னியது. குறுநகை எப்போ

தும் காத்திருந்தது அவள் சிமிழ் இதழ் ஓரங்களில்—ஆமாம்; குமாரைக் கவர்ச்சிக்க !

அழகுக்காக விடப்பட்டிருந்த பூந்திரையை விலக்கிக் கொண்டு அவள் அன்னை பட்சணம் நிறைந்த தட்டை ஜுபேதாவிடம் நீட்டினாள்.

"இன்று பார்க்கவேண்டும் எங்கள் மலாய் நாட்டில். எங்கும் ஒரே குதூகலமாகத்தான் இருக்கும், ஆனால் இப்போது என் தந்தை..."—அழகாகத் தமிழ் பேசிக் கொண்டிருந்த அவளுக்குப் பழைய நினைவு வந்தது. பாழும் யுத்தத்தில் இறந்துபோன அப்பாவின் ஞாபகம் அவளை அழச் செய்துவிடும் போலச் செய்தது. இருந்தும் நிலையை உணர்ந்த ஜுபேதா, "மன்னிக்கவேண்டும். தயவுசெய்து எல்லாவற்றையும் ருசித்துப் பார்க்கவேண்டும்" என்று அன்பு மொழி உதிர்த்தாள்.

இப்படி ஜுபேதா—குமார் இவர்களின் வாழ்வில் புது ரசனையின் புதுமணம் வீசியது. நாட்களும் வேகமாக ஓடின. ருசிகரமான நாவலொன்றின் பக்கங்கள் புரட்டப்படுவதுபோல.

## 3

அன்று, அரைகுறையாக விடப்பட்டிருந்த 'லேஸ்' துண்டை பூர்த்தி பண்ணுவதில் ஈடுபட்டிருந்தாள் ஜுபேதா. எதிரில் போடப்பட்டிருந்த சாய்வுநாற்காலியில் சாய்ந்திருந்தான் குமார். அவன் பார்வை அவளது பருவகால ரூபலாவண்யத்தில் கட்டுண்டிருந்தது. மகுடியில் மயங்கும் பாம்பின் நிலை.

"ஸார் தங்கி."

'தங்கி'—குமார் கதிகலங்கினான்.

'உன் அம்மாவுக்கு உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. உடனே புறப்படவும்.'

"ஜுபேதா, பர்மாவுக்கு வந்த இந்த நாலைந்து ஆண்டுகளில் இன்றுதான் எனக்கு ஊர்விஷயம் தெரிகிறது. இடையில் குமுறிப்புரண்ட பாழும் சண்டை முதலிய அசந்தர்ப்பங்கள் என்னை அன்னை பூமிக்கு அடியெடுத்து வைப்பதினின்றும் தடுத்துவிட்டன. உன் பரிச்சயம் ஏற்பட்ட நாள் முதலாய்—உன் அன்னையைக் காணும் தருணமெல்லாம், தன் உயிரையே என்மீது வைத்து என்னைப் பேணி வளர்த்து ஆளாக்கிய என் அம்மாவின் ஆசைகளினையும் என்னை ஆட்கொள்ள, மனமுடைந்து பிரமை பிடித்து உட்கார்ந்திருப்பேன். உனக்கு ஞாபகமிருக்கிறதா? சில சமயங்களில் 'என் ஒருமாதிரி யிருக்கிறீர்கள்' என்று ஆறுதலுடன் கேட்பாயே, இதுதான் காரணம்..."—மேலும் குமாரால் பேசமுடியவில்லை. துக்கம் நெஞ்சைப் பிடித்தது.

'இளந்தென்றல்; முல்லைநகை மலர எச்சமயத்திலும் மலர்ந்த முகத்துடன் தன்னை எதிர் கொண்டழைக்கும் குமார்; சூழ்நிலையில் அழகின் கூத்து—இவற்றில் நிலவும் ஒளியும் போல ஐக்கியப்பட்டிருந்த குமார், தன்னை விட்டுப் பிரிய நேரிடுகிறதே' யென்று எண்ணிய ஜுபேதாவின் பேதை உள்ளம் அனலில் புழுவெனத் துடித்தது.

அன்னையின் இன்முகம் காணத் துடித்த குமார் விரைவில் திரும்புவதாகத் தேறுதல் கூறிப் புறப்பட்டான். பாவம், ஜுபேதா துவண்டுவிட்டாள்.

*　　　*

## 4

"குமார்"

"அம்மா"

தாயும் தனயனும் இவ்விதம் பாச மொழிகளைப் பரி மாறிக் கொண்டனர். தன் அருமை மகனை எப்படியும் மீண்டும் கண்டு விடவேண்டுமென்ற ஆதுரத்தில் அவள் பகவானையும் பக்கபலமாக்கிக்கொள்ளப் பிரார்த்தித்துக் கொண்ட காணிக்கைகள் எத்தனையோ! அவள் கனவு பலித்துவிட்டது. ஒரே புதல்வனைக் கண்குளிரக் கண்டு விட்டாள்.

குமார் அன்னையின் அண்மையில் அமர்ந்து வேண்டி யன செய்தான். ஆனால், அவன் உள்ளம் மட்டும் ஜுபேதா வைச் சுற்றியிருந்ததை அவன் தாய் எவ்விதம் அறிவாள்?

உற்சாகமற்ற ரீதியில் காலதேவனின் கைப்பிடியினின் றும் நாட்கள் பல நழுவி ஓடி, மாதம் மூன்று கடந்ததைக் கோடிட்டுக் காட்டியது காலண்டர்.

"குமார், இத்தனை வருஷங்களாக என் மனத்தில் உழன்ற ஆசை உன்னால் தான் பூர்த்தியாகவேணும். அதுவே அன்று மரணப்படுக்கையில் உன் தந்தை என்னிடம் வாங்கிக்கொண்ட பிரதிக்ஞையும் கூட. எனக்கும் இன்றோ நாளையோ என்றிருக்கிறது. அதற்குள் உனக் குக் கல்யாணம் செய்து கண்ணாரப் பார்க்கவேண்டும், அப் போதுதான் என் ஆவி சாந்தியுடன் பிரியும்"

'கல்யாணம்'—

மறுபடியும் முணுமுணுத்தது அவன் வாய். திகைத்து நின்ற அவன் சிந்தனை சுழன்றது.

'எனக்கு மணம்செய்து பார்க்கவேண்டும். இதுதானே என் அன்னையின் ஆசை. ஜுபேதாவை இங்கு அழைத்து வந்து வாழ்க்கைத் துணைவியாகக் கைப்பிடித்தால்......!

ஆம்; சமூகம்! காலத்திற்கேற்ப, மனிதன் நிலைக்கேற்ற பிரகாரம், சமய சந்தர்ப்பத்தை அறிந்து பச்சோந்திபோல நடிக்கும் இந்தச் சமூகத்தைப் பற்றி யாருக்குக் கவலை—?'

குமார் திட்டமிட்டான் ஜுபேதாவை அழைத்துவர தாயிடம் 'ஆகட்டும்' என ஆறுதல் சொல்லி, அவள் நீட்டிய யாரோ ஒரு பெண் போட்டோவையும் ஜாடையாகப் பார்த்துவிட்டுப் புறப்பட்டான். ஜுபேதாவைக் கையுடன் அழைத்துவந்து அம்மாவிடம் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் சென்னை வந்தான். இடைக்காலப் பிரிவின் பின்னர் தன் இதய ராணியைக் காணப்போகும் பூரிப்பிலே மெய்மறந்தான் குமார்.

துறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டான். ஒரே ஜனக் கும்பல். அத் திசையில் திரும்பியது அவன் நடை.

சர்க்கஸ் கூடாரம். ஜவான் ஒருவன் வித்தை செய்து கொண்டிருந்தான். வெய்யில் தணியவே கூட்டம் அதிகரித்தது. சட்டென்று அவன் விளையாட்டை நிறுத்தினான். எங்கும் நிசப்தம். கூடாரத்தினின்றும் ஜலங்கைகள் ஆர்ப்பரிக்க ஓடோடி வந்து 'டான்ஸ்' ஆடினாள் ஒரு நாரீ. ஒரே கரகோஷம். கூர்ந்து நோக்கினான் குமார்.

"ஜுபேதா"—அவன் நெஞ்சம் பிளந்துவிட்டது போன்ற உணர்வு எழுந்தது. யாருடைய கடைக்கண் பணிக்குக் காத்திருந்து ஓடோடி வந்தாரோ, அதே உருவம் அந்தப்போதில் வேறொருவன் கண்காணிப்பில் அவன் முன் தோற்றமளித்தது. குமாரின் உள்ளம் குமைந்தது. இரத்தக் குழாய்களில் உறைந்திருந்த உதிரமெல்லாம் அப்படியே உருக்கிச் சொட்டுச் சொட்டாக உதிர்ந்தன கண்ணீராக.

இருபுறமும் இழைந்தோடிய கூந்தலை மார்பிடையே நெளியவிட்டு, இதழ்களில் புன்னகை மலரைத் தூவியபடி கையில் தட்டு ஏந்தி ஒருமுறை சுற்றி வந்தாள் அவள். உள்ளத்தில் தீப்பொறி பறந்தது குமாருக்கு. கைவிரலை நோக்கினான், அன்று, காதற்சின்னமாகத் தனக்கு ஜுபேதா அணிவித்த அன்பின் முத்திரை—அந்த மோதிரம் காணப்பட்டது. மறுவிநாடி அதே மோதிரம் அவள் ஏந்திவந்த தட்டில் தவழ்ந்து முத்தமிட்டது. பொங்கும் உள்ளத்துடன் திரும்பிவிட்டான் குமார்.

* *

## 5

குமாருக்கு உலகமே வெறும் சூன்யமாகத் தோற்றமளித்தது. ஜுபேதா தன் எதிர்கால வாழ்விற்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டென எண்ணி எக்களித்த நாட்கள் பலவுண்டு. நிராசை மயமான வாழ்வில் ஒப்பற்ற ஆசையின் உருவம் அந்தப் பொற்கொடியாள் எனப் பூரித்த தினங்கள்தான் எண்ணிலடங்குமா? ஆனால், கடைசியில்......? அவள் அவனை ஏமாற்றிவிட்டாள்; வஞ்சித்து விட்டாள். 'பெண் ஓர் புதிர் என்கிறார்களே, எவ்வளவு அப்பட்டமான உண்மை? ஆமாம்; ஜுபேதா ஒரு விடுவிக்க இயலாத புதிர். அழகு காட்டி, ஆசை மூட்டியதெல்லாம் வெறும் வேஷம். உளங்குளிரப் பேசிய வார்த்தைகள் முழுவதும் வர்ண ஜாலங்கள். சந்தேகமில்லை. அவள் விஷ கன்னிகை. நீறுபூத்த நெருப்பு. தகதகக்கும் அனல் கங்குகளைப் போர்த்தித் திரையிட்டிருக்கும் சாம்பலின் சாகசத்தன்மையைப் பற்றிச் சிந்திக்கவில்லையே!

குமாரின் உள்ளக்கடலில் பலதரப்பட்ட எண்ண அலைகள் குமுறின. பித்துப் பிடித்தவன் நிலையில் காணப்பட்டான் குமார்.

"குமார்"

"அம்மா"

"இன்னுமா யோசிக்கிறாய். பெண்ணின் படத்தைப் பார்த்தாயா?"

"............"

"குமார்!"

"அம்மா" என்றான் நினைவிழந்த நிலையில்; கண்களில் அரும்பிய நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டான்.

"அம்மா, உங்கள் இஷ்டம்போல அந்தப் பெண்ணை முடித்து விடுங்கள்."

பிறந்து வளர்ந்த இடத்தைவிட்டுப் புகுந்த மனையில் நம்பிக்கைகொண்டு அடைக்கலம் ஒப்புவிக்கப்பட்ட சுகுணாவை மனைவியாக ஏற்றான் குமார். ஜுபேதாவிற்கு நிரந்தரமாக அளிக்கப்பட்ட இதயத்தில் சுகுணா கொலுவைக்கப்பட்டாள். மகனுக்கு மணம் செய்வித்து மனங்குளிர்ந்த சந்தோஷத்திலே அவன் அன்னை கண்களை மூடிவிட்டாள்.

குமார், கண்ணீருடன் கழிந்த கடந்தகாலப் புண்பட்ட நிகழ்ச்சிகளை மறக்க முயன்றான். சுகுணாவின் ஒவ்வொரு செய்கையிலும், உபசரிப்பிலும், அவன் ஆச்சரியப்பட்டான். ஆரம்பத்தில் இத்துணை தூரம் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் பலபல சமயங்களில் அவன் செய்யும் ஒவ்வொரு கேளிக்கையிலும் ஜுபேதாவின் நினைவு குறுக்கிடுவதைத் தடுக்கவே முடியவில்லை. ஜுபேதாவின் ஞாபகம் அவனைப் பித்தாக்கிவிடும். அனால் பித்தம் தெளிவாக்க மருந்து இருக்கவே இருக்கின்றதே — அதுதான் சுகுணா!

நாட்கள் மாதங்களாகி மறைந்தன. சுகுணாவிற்கு இருந்தாற்போல விஷஜுரம் கண்டதும், வியாதி முற்றி

உயிருக்கு ஹானி விளைக்கும் நிலைக்கு வந்தவுடன் குமாரின் நெஞ்சம் வேதனையால் நொந்தது. எல்லாம் சோதனையென எண்ணி மனமுருகினன்.

"அன்பரே, தயவு செய்து என்னை மன்னிப்பீர்களா?" என்றாள் சுகுணு கணவனின் கைத்தலம் பற்றியவளாய்.

குமாருக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"மன்னிப்பா, எதற்கு? யாரை மன்னிப்பது?"

"அன்பரே, மனமறிந்த வகையில் இந்த அபலை இழைத்த ஒரே குற்றத்திற்கு, பாவத்திற்குத்தான் மன்னிக்க வேண்டுகிறேன். ஆமாம்; என் சுயநலத்திற்காகவே அப்படிச் செய்ய மனம் துணிந்தேன். எதிர்பாராமல் கிட்டிய இன்ப வாழ்வை விரல்வழி வழிந்த தேன்போல நழுவவிட மனம் வரவில்லை. நம் இருவருக்கும் மணமான அதே தினம்தான் அந்தக் கடிதம் உங்களுக்கு வந்தது. ஏதேச்சையாகக் கண்ட அக்கடிதம் திரும்பவும் உங்கள் வசம் சேர்ப்பிக்கப்பட்டால் பிறகு உங்கள்வாழ்வு எவ்விதம் திரும்பி எத்தகைய விபரீதம் விளையுமோ என்ற அச்சத்தில்தான் அவ்விதம் செய்தேன். என்றென்றும் உங்கள் பாதகமலங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் பூரண பாக்கியத்துக்கு அருகதையுடையவளாக இருக்கவே அக்கடிதத்தை உங்களிடமிருந்து மறைக்க முற்பட்டேன்" என்று விக்கலுக்கும் விம்மலுக்குமிடையேகூறி அக்கடிதத்தையும் குமாரிடம் நீட்டினாள் சுகுணு. உணர்ச்சி வசப்பட்டுப் பேசிய அவளுக்கு மூச்சுத் தடுமாறியது.

கடிதத்தை வாங்கிப் படித்தான் குமார். உலகமே அப்படியே நிலை பெயர்ந்து பாதத்தின் அடியில் பம்பரமெனச் சுழல்வது போலிருந்தது.

"ஆ, என் ஜுபேதாவின் வாழ்வு இதுகாறும் முடிந்திருக்குமே........ஐயையோ!"

அலறினன் குமார். காலங்கடந்து, எத்தனையோ மாதங்களுக்குப் பின்னர் தன் கைக்கு ஜுபேதாவின் கடிதம் கிடைத்திருக்கும் துர்ப்பாக்கியத்தை எண்ணி மனம் நொந்தான்.

'ஆம்; சந்தேகமில்லை. ஜுபேதா நிரபராதி. நீறு பூத்த நெருப்பு அவளல்ல. தியாகச் சின்னம் அவள். ஆனல் சுகுணுவின் பேதலித்த இச் செய்கைதான் நீறு பூத்த நெருப்பாகி விட்டது. விதியின் விளையாட்டிற்கு யார் யாரைக்குறை கூறுவது? இத்தகைய புதிர்தான் வாழ்க்கையின் விதியா? அட, கடவுளே! இவ்விதமான கோர முடிவு தான் வாழ்வின் உணரக் கூடாத விடுகதையா? அந்தோ!'

நீர்மல்கிய கண்களுடன் சுகுணுவைப் பார்க்கத் திரும்பினன் குமார். ஆனல் அதுவரை அவள் உடலில் உயிர் இருந்தால்தானே?

ஜுபேதாவின் கடிதத்தில் கண்ட விஷயம்:—

"அன்பரே,

பூர்வப் பிறவியில் நம் இருவரிடையே நிகழ்ந்த ஏதோ ஓர் பந்தம்—விட்டகுறை—நம்மை இப்பிறவியில் ஓரளவு ஒன்று சேரச் செய்தது. இருள் செறிந்த வாழ்வில் அன்பின் சுடரை இனியாகிலும் நிச்சயம் காணலாம் என என் மனதைத் திடமுறச் செய்தேன்; ஆனல் கனவு பகற் கனவாகி விட்டது.

அன்று, கழைக் கூத்தாடி வேஷத்தில் அன்னிய புருஷன் ஒருவனுடன் சேர்ந்து விளையாடி வேடிக்கை செய்த என்னைக் கண்டதும் தங்கள் மனம் தவருக எண்ணிவிட்

டது. அன்று தட்டு ஏந்தி வருகையில் தங்களுக்கு நான் அளித்த மோதிரத்தை வீசி எறிந்ததைக் கண்டதும் என் உள்ளம் இடிந்தது. நீங்கள் என்னை அடையாளம் புரிந்து கொண்டீர்கள் போலும். ஆனால் என்னால் இயலவில்லை. எங்கும் தேடினேன்; பயனில்லை.

அந்த மனிதர் வேறு யாருமல்ல. அவர் என் தந்தை. ஆமாம்; சொந்த தந்தைபோலத்தான். ஏன்? விதியின் அதிசய அரவணைப்பில் உயிரிடம் மன்றாடிய எனக்குத் திரும்பவும் புத்துயிர் அளித்து, இதுவரை என்னைப் பேணும் அவர் தந்தையே அல்லவா?

நீங்கள் சொந்த ஊர் சென்ற பத்து தினங்களில் என் அன்னையின் வாழ்வும் முடிந்தது. தாயைப் பிரிந்த சோகத்தில் என் உடல் க்ஷீணித்தது. பின், ஆஸ்பத்திரியில் கிடந்தேன். ஆதரிப்பாரற்று அனாதையானேன். அந்த வேளையில்தான் அந்தப் புண்ணியவான் அதே வார்டில் உடல் நலமின்றிக் கிடந்தார். கழைக் கூத்தாடி அவர். அவருக்கு ஏனோ என் பேரில் பச்சாத்தாபம் பிறந்தது, இல்லாவிடில் இவ்விதம் தாங்கள் என்னைக் கேவலமாக எண்ணுவதற்கு நேரிட்டிருக்குமா?

நான் தாங்கள்பால் வைத்திருக்கும் காதல், தெய்வத் தன்மையுடையது. இழிவாக என்னைச் சந்தேகிக்கும் நிலையில், மீளவும் உங்கள் கண்முன் வர விரும்பவில்லை. மனச் சாட்சியும் மறுக்கிறது. ஆனால் ஒரு வேண்டுகோள், இந்த அபலை ஜுபேதா ஓர் நிரபராதி என்பதை மட்டும் நினைவுவைத்துக் கொள்ளுங்கள். இந்தத் தபால் உங்களிடம் சேருமுன் என் வாழ்வு—ஆம் என் உயிர்ப் பறவை சிறகடித்துப் பறந்து விடும். கடைசி முறையாகத் தங்கள் பாதங்களை வணங்குகிறேன்.

ஜுபேதா”

*சாவித்திரி-பெண் ! இதயம் இளகி னாள். கடந்ததை மறந்தாள்-மறக்க எத்தனித்தாள் !*

# இளந்தென்றல்

கண் கலங்க அந்தப் பையன் சொல்லி முடித்த விருத்தாந்தம் மாரிமுத்துவின் இதய ஆழத்தைத் தொட்டது போலும். அடக்க ஒடுக்கமாக நின்றுகொண் டிருந்த பையனைத் திரும்பவும் ஒரு முறை எடை போடும் பாவனையில் நிமிர்ந்து பார்த்தான். அவனுடைய திட்டம் ரத்தினத்திற்கு வயது பத்துக்குக் குறையாதென்பது; அதை ஒட்டிய உடலமைப்புதான். ஆனாலும் ஏழ்மையின் திரைமறைவில் புதைந்திருந்த கவர்ச்சி கனிந்த முக விலாசம். நைந்துபோன கந்தை வேஷ்டி யொன்றை உடுத்தி யிருந்தான் அவன். களங்கமற்றுச் சுழன்ற விழி களிலே துயரச் சாயல்; இடையிடையில் தோன்றிய சஞ் சலத்தை மாற்றவோ மறைக்கவோ இதழ்க் கோடியில் இழைய விட்டிருந்த புன்சிரிப்பு.

கண் இமைக்காமல் அந்தப் பையனையே பார்த்துக் கொண்டிருந்த மாரிமுத்துவின் கண்கள் கலங்க ஆரம்பித் தன. 'சடக்' கென்று தட்டில் மிகுந்திருந்த 'பீடா' ஒன்றை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு நிலைமையைச் சமாளித்தான்.

"ஏய், ரத்தினம்"

"ஐயா!"

"அப்படின்னு எந்தவிதமான அப்பனுக்கும் இல்லாம கடையிலே நடந்துக்கணும். சொல்லறது தெரிஞ்சுதா?"

"ஆகட்டுமுங்க."

அண்டி வந்தவனுக்கு அபயம் அளித்த பூரிப்பு மாரிமுத்துக்கு. தினம் தினம் ஒருவேளைச் சாப்பாட்டுக்குக் கூடத் திண்டாடிப்போன தனக்கு மனமிரங்கி ஆதரவு காட்டிய தன் முதலாளியை மனமாரப் போற்றினன் ரத்தினம்.

மாரிமுத்து வாயில் குதப்பியிருந்த எச்சிலை உமிழ்ந்து விட்டு உள்ளே சென்ருன் வியாபாரத்தைக் கவனிக்க. அதற்குள் முந்திக்கொண்டு சில்லறையை முதலாளியிடம் பதவிசாக நீட்டினன் பையன்.

"இதுக்கு முந்தியே பெட்டிக்கடை அனுபவங்கூட உண்டா, தம்பி?"

ரத்தினம் சிரித்தான்.

"பேச்சு ஞாபகத்திலே மறந்தே போயிட்டேனே! பாவம், எப்போ சாப்பிட்டதோ? இன்னும் ஒரு மணி சாவகாசத்திலே வீட்டிலே போய்ச் சோறு சாப்பிடலாம். அதுக்குள்ளே இதுகளைச் சாப்பிடு!" என்று சொல்லி நாலைந்து மலைப்பழங்களைப் பியத்துக்கொடுத்து, அத்துடன் 'ஐஸ்' போட்டு ஒரு 'கிளாஸ்' சர்பத்தும் கலந்து கொடுத்தான் மாரிமுத்து.

ரத்தினத்தின் கண்களினின்றும் கண்ணீர் கசிந்தது.

* * *

மாரிமுத்து தன் மனைவி செல்லத்திடம் புதிதாகச் சேர்த்திருக்கும் பையனைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளில் விஷயத்தை விளக்கி வைத்தான். 'ஒண்டிக்கையாக எவ்வளவு நாள் கடையைக் கண்ணில் எண்ணெய் ஊற்றிக்கொண்டு கண்காணிக்க முடியும்' என்று சதா எச்சரித்து வந்த செல்லத்துக்குப் புதிதாக ரத்தினத்தை வேலைக்குச் சேர்த்துக் கொண்டது எவ்வளவோ ஆறுதலாகப் பட்டது.

நாட்கள் காலச் சுழலில் தேய்ந்தன. 'பொடியன்' ரத்தினம் மீதிருக்கும் நல்ல அபிப்பிராயம் தம்பதிகள் இருவராலும் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. அடுத்த சில நாட்கள் கழித்து மாரிமுத்து பெட்டிக்கடைச் சாவியையும் பையனிடமே ஒப்படைத்தான். ரத்தினம் 'கல்லா'வில் அமர்ந்துகொண்டான். அன்றாட வரவு செலவுக் கணக்கை முதலாளியிடம் சரி பார்த்து ஒப்படைக்க வேண்டியது அவன் பொறுப்பு.

ஏகதேசங்களில் கடையை 'செக்' செய்ய வந்து போவான் மாரிமுத்து. "பயல் ரொம்ப சூடிகை!" என்று தன் சகபாடிகள் ரத்தினத்தை உயர்த்திக் கூறும்போதெல்லாம் மாரிமுத்துவின் மனம் மகிழ்ச்சி யடையும்.

மாரிமுத்துவும் அவன் மனைவியுமாக இருந்த அந்தக் குடும்பத்தில் ரத்தினமும் ஒருவனுகவே கருதப்பட்டான். நாளாவட்டத்தில் இனமறியாப் பாந்தவ்யம் ரத்தினத்தின் மீது காந்தம்போல ஆரோகணித்திருப்பதை மாரிமுத்து நன்கு உணர்ந்திருந்தான். அதேமாதிரி செல்லத்துக்கும் பையன்மேல் அலாதியான வாஞ்சை. தன் வீட்டு வேலைக்காரப் பையன் என்றநினைவே அவளுக்கு இல்லை. ஒருக்கால்

பிள்ளைப்பேறில்லாத அவர்களுடைய இருண்ட வாழ்வில், விடி வெள்ளி போன்று ரத்தினம் வந்திருக்கிறனே என்ற பாசமாயிருக்குமோ?

"ரத்தினம், உன்னை வந்த நாள்தொட்டு ஒண்ணு கேட்கணுமின்னு இருந்தேன். உனக்கு அப்பா, அம்மா இருக்கிறார்களல்லவா?" என்று ஒரு நாள் கேட்டாள் செல்லம்.

இந்தக் கேள்வியால் ஒரு கணம் நிம்மதியடைந்தான் பையன். தன்னைப் பற்றி இவ்வளவேனும் அக்கரைகொண்டுள்ள அந்த 'அம்மா' விடம் அவனுக்கு என்றுமே மரியாதை. அடுத்த நிமிஷம் அவனுடைய பிஞ்சு மனத்தை ஆத்திரமும் அழுகையும் ஆக்கிரமித்துக்கொண்ட.

"அப்பா இல்லே. அம்மா மட்டுந்தான் ஊரிலே தனியா இருக்கு. வயத்துப் பாட்டுக்கு ஏதாச்சும் கைவேலே செஞ்சு பிழைச்சுக்கிடுது. விபரந்தெரியாத சின்னப்பிள்ளையா இருக்கிறப்பவே எங்க அப்பா—அப்பாவா அவன்! ஹும், அம்மாவை நட்டாத்திலே விட்டுப்புட்டு எங்கேயோ-யாரையோ ஒருத்தியை வேறே கல்யாணம் செய்துகிட்டு ஓடிப்பூடிச்சாம். இவ்வளவு வருசமா நாங்க ரெண்டு பெரும் செத்தோமோ பிழைச்சோமான்னு தெரிஞ்சிக்கக் கூட அவருக்கு மனசு இளகல்லே. ஆனா அம்மா, உங்களைப் பெத்த தாயாளண்ணிச் சொல்றேன்—எங்க அப்பனை மட்டும் ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் என்றைக்காச்சும் அடையாளந் தெரிஞ்சு கண்டுட்டேன்னா, அப்புறம் அவன் உசிரு அதோடு சரி...!"

முகம் சிவக்கப் பேசிய ரத்தினத்தின் கோபத்தைக் கண்ட செல்லம் மலைத்து நின்றாள்.

விதாணை புரிந்த பெரியவர்களைப்போல் ஆத்திரமாகப் பேசிய பையனின் பயங்கரச் சொற்கள், அவன் வறுமையை எண்ணிப் பார்க்கும் நிலைக்குச் செல்லத்தை இட்டுச் சென்றனவோ என்னவோ, விழி கலங்கினுள் அவள்.

"தம்பி, கவலைப்படாதே! எல்லாத்துக்கும் நல்ல வழி பிறக்கும். உடம்பை வீணு அலட்டிக்காமல் தூங்கு."

* * *

அடுத்த இரண்டொரு நாளாக ரத்தினத்துக்கு எப்படியும் தன் அம்மாவைப் பார்த்து வரவேண்டுமென்ற ஆசை அவன் மனதை வெகுவாகப் பற்றிக் கொண்டது. ஒட்டி உலர்ந்த உடலுடன் சோகச் சித்திரமாக வறுமையின் திருமுன் நிற்கும் தாயின் முகம் அகக்கண்ணில் தோன்றியது. அவனுக்கு அழுகை யழுகையாக வந்தது. தான் மாத்திரம் வேளாவேளைக்குச் சாப்பிடுவது அவனுக்கு மனம் நிறையவில்லை. உயிரைப் பணயம் வைத்துத் தன்னை ஆளாக்கிய அம்மாவுக்குத் தன் கையால் சம்பாதித்து ஏதோ 'நாலு, ரெண்டு' கொடுக்கவேண்டுமென்பது அவன் எண்ணம்—கனவு!

ஒரு நாள் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், சாப்பாடு போக ஏதாவது சம்பளம் 'நேருசீராக'ப் போட்டுத் தருவதாக முதலாளி சொல்லக் கேட்டதிலிருந்து ரத்தினத்துக்கு அணைகடந்த உற்சாகம் ஏற்பட்டது. கிடைக்கும் சம்பளத்தை அப்படியே தன் தாயிடம் கொண்டு போய்க் கொடுக்கவேண்டுமென்ற ஆதங்கத்தில் நாட்களை விரல்விட்டு எண்ணிக்கொண்டிருந்தான்.

பொழுது விடிந்து பொழுது போனுல், தன்னிடம் முதலாளியும் அவருடைய மனைவியும் காட்டும் பரிவு—பாசம்

இவற்றை எண்ணி ரத்தினத்தால் வியக்காமல் இருக்க முடியவில்லை இப்படிப்பட்ட முதலாளியிடமே எப்பொழுதும் காலத்தைப் போக்கக் கடவுள் அனுக்கிரகம் செய்யவேண்டுமென வேண்டிக்கொள்வான்.

* * *

அன்று ஞாயிற்றுக்கிழமை; கடை கிடையாது; மத்தியான வேளை; கூடத்தில் திருவாசகம் படித்துக் கொண்டிருந்தான் மாரிமுத்து. 'முதலாளி ஐயா இன்னிக்கி கனகுஷியா இருக்காரே!' என்று ஊகித்த ரத்தினத்திற்கு, 'திடுதிப்'பென்று அவருக்கு ஏற்பட்ட மகிழ்வுக்குக் காரணம் என்னவென்று விளங்கவில்லை.

"இன்னும் நாலஞ்சு நாள் வாக்கில் ஊருக்குப் போயிட்டு வரலாம்" என்று மாரிமுத்து ரத்தினத்திடம் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தான். அதில் அவனுக்குக் கொள்ளை சந்தோஷம். "அடுத்த கிளமைக்குள்ளே அம்மாவைக் கண்டு பணத்தை நீட்டினதும், அதுக்கு எவ்வளவு சந்தோசம் உண்டாகும்!" என்று நினைத்துப் பார்த்த பையனுக்கு மகிழ்ச்சி இரட்டித்தது.

முதலாளியைப்போல அவனுக்கும் பாட்டுப் படிக்க வேண்டுமென்று தோன்றியது. பீரோவில் வைத்திருந்த சினிமாப் பாட்டுப் புத்தகத்தின் ஞாபகம் வரவே, அதை எடுத்துக்கொண்டு வருவதற்காகச் சென்றான். எடுத்த அவசரத்தில் பாட்டுப் புத்தகத்துடன் கூடவே சேர்ந்து ஒரு போட்டோவும் தரையில் விழுந்தது. ரத்தினம் குனிந்து படத்தை எடுத்துப் பார்த்தான். படத்தில் காணப்பட்ட தன் அம்மாவையும் அருகில் உட்கார்ந்திருந்த தன் முதலாளியின் உருவத்தையும் மாறி மாறிப் பார்த்தான். அவனுக்கு உலகமே சுழன்றது!

"அப்படியானா அம்மா பக்கத்திலே இருக்கும் முதலாளிதானா என் அப்பா?"

இந்த ஒரு கேள்வி பல முறை அவன் இதய அடித்தளத்தில் எதிரொலித்தது. ரத்தினத்தின் பிஞ்சு மனம் அதைத் தாங்கவில்லை; குமுறியது. விதியின் விசித்திரம் இப்படி நிகழக் கூடுமென்பதை அவன் எவ்விதம் நினைத்திருப்பான்?

மீண்டும் அந்தப் புகைப்படத்தை அவன் விழி பிதுங்கப் பார்த்தான். சிறுபிள்ளையாக இருக்கையில் இதே போல் வேறொரு படத்தைத் தன்னிடம் அவன் தாயார் காட்டியிருப்பதும் சட்டென்று ஞாபகம் வந்தது.

அதே சமயம், "அண்ணா, சாவித்திரி அம்மாவை அழைச்சிக்கிட்டு வந்தாச்சு. லேசிலே வரவே மாட்டேனுட்டாங்க. அப்புறம் ரத்தினம் இங்கேதான் இருக்குன்னு சொன்னதும் மறுபேச்சுச் சொல்லாமே வந்துட்டாங்க!" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் ஒருவன்

தன் அம்மாவின் பெயரைக் கேட்டவுடன் ரத்தினம் திரும்பிப் பார்த்தான் அவனுக்கு அந்தக் காட்சி கனவு போலப் பட்டது. எதிரே நின்றுகொண்டிருந்த தன் அம்மாவைக் கண்டமாத்திரத்தில் "அம்மா!" என்று கூவிய வண்ணம் ஓடிப்போய்த் தன் தாயின் கால்களைக் கட்டிக் கொண்டான். தன் மகனை நடுங்கும் கரங்களால் வாரியணைத்து, 'தம்பி, ஏதுக்கு அழுகணும்? எழுந்திரு! நம்ம ரெண்டு பேரும் இப்பவே புறப்படணும். உன்னைப் பார்க்கணுமின்னுதான் இவ்வளவு தூரம் வந்தேன். இனி வேறே இடத்தைப் பிடிச்சு வயிற்றை வளர்த்துக்குவோம். மரம் வச்சவன் தண்ணி ஊத்தமாட்டானா?" என்றாள் சாவித்திரி.

அவள் குரலில் சோகம் சுருதி கூட்டிற்று; புயல் வீசியது; குமுறியது.

இதைக் கேட்டதும் மாரிமுத்து நடுங்கிப் போனான். தன் முதல் மனைவியின் இருக்குமிடம் தெரிந்து அவளை அழைத்துவர ஏற்பாடு செய்தவன் மாரிமுத்துதான். காரியமும் கைகூடிவிட்டது. தன் இரண்டாம் மனைவி செல்லத்தின் சம்மதத்தின் பேரில்தான் அவன் எல்லாவற்றையும் செய்தான். தன் கணவன் எப்படியேனும் மனநிம்மதியுடன் இருக்கவேண்டுமென்பது செல்லத்தின் லட்சியம். சொல்லப் போனால் அவள் மூலமே ரத்தினத்தைப் பற்றிய சில தகவல்களை அறியலானான் மாரிமுத்து. எண்ணங்களும் சூழ்நிலையும் அனுசரணையாகவே அமைந்தன. ஆனால்...?

செல்லம், சாவித்திரி கூறிய வார்த்தைகளைக் கேட்டுத் திகிலடைந்தாள். தன்னை எரித்து விடுபவள் போலப் பார்த்து நின்ற சாவித்திரியை ஆதரவுடன் நோக்கியவண்ணம், "சாவித்திரி அக்கா, நீங்க தம்பியைக் கூட்டிக்கிட்டு எங்கே போகப்போறிங்க? ஒங்களைப்பற்றிச் சங்கதி தெரிஞ்சதும் மெனக்கட்டு அழைச்சு வந்து இங்கே சேர்த்துட வேணுமேன்னு கவலைப்பட்டேன். உங்களை என் உடன் பிறந்த அக்காளா எண்ணிக் கெஞ்சிக் கேட்கிறேன்—இங்கேயே நாம் ரெண்டுபேரும் சேர்ந்திருக்கலாம். 'அவரு' மனசை இனியும் சோதிக்கப்படாது. ரத்தினத்துக்கும் சொல்லுங்க...!" என்றாள் செல்லம்.

"சாவித்திரி, கடந்தது கண்ணீரோடு தொலையட்டும். ரத்தினத்தை முதலிலே கண்டதுமே எனக்குச் சம்சயம் தட்டுச்சு. நெத்தி மச்சம் கடைசியா என் சந்தேகத்தைப் போக்கிடிச்சி. அவன் என் மகன் என்கிறதைப் புரிஞ்சுக்

கிட்டேன். ஆனாலும் எதுக்கும் காலமும் வேளையும் வர வேணுமா? கொஞ்ச நாள் முந்திதான் நான் உன்னைக் கல்யாணம் செஞ்சுகிட்ட ரகசியமே செல்லத்துக்குத் தெரியும். உன்னைக் கூட்டிவர அவளேதான் ஏற்பாடெல்லாம் செஞ்சாள். அவள் பேச்சுக்காகிலும் காது கொடு!'' என்று கெஞ்சினான் மாரிமுத்து.

சாவித்திரி—பெண்! இதயம் இளகினாள். கடந்ததை மறந்தாள்—மறக்க எத்தனித்தாள்.

மாரிமுத்து அப்போதுதான் மறுவாழ்வும் பெற்றான். செல்லம் தன் ஆசை நிறைவேறிய பரவசத்தில் முறுவலித்து நின்றாள்.

இந்த விபரீதக் காட்சிகளை—மாற்றங்களைக் கண்ட ரத்தினத்துக்கு ஒன்றுமே புலப்படவில்லை. கணவன்—மனைவி என்ற பந்தமே தன் அம்மாவின் மனதை இவ்விதம் மாற்றிவிட்டதென்பதை அவன் அறிய முடியுமா?

தன் மகனுடைய திகைப்பையும் வியப்பையும் அறிந்தவள்போல, “தம்பி, அப்பாவோடே இனி இங்கேயே இருந்துடலாம்'' என்று கனிவுடன் சொல்லி அன்புடன் ரத்தினத்தைத் தடவிக் கொடுத்தாள் சாவித்திரி.

புயல் ஓய்ந்தது; இளந்தென்றல் இதமாகப் பண்ணிசைத்தது!

"....உங்க பக்கத்திலேயே சாகி றேன்; உங்களைப் பார்த்துக்கிட்டே சாகிறேன்; இது ஒண்ணே என் ஆசையைத் தீர்த்துவைச்சமாதிரி!"

அதற்குப் பிறகு அவள் உதடுகள் அசைவதை நிறுத்திக்கொண்டன. அவள் இதயமும் ஒலிப்பதை நிறுத்திக்கொண்டது!

# ஆசைக் கனல்

உச்சி வேளை!

படை பதைக்கும் வெய்யில்; கண்மண் தெரியாமல் பேய்க் கூத்தாடும் சூறைக் காற்று!

சாவிற்குத் தப்பி வந்தவள்போலத் 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று மருண்டோடி வந்து நின்றாள் தெய்வானை. ஏதோ ஓர்விதமான அமைதி பூத்து நின்றது அவள் மனசில். நெஞ்சில் கையை வைத்துப் பார்த்தாள். 'டக் டக்' சப்தம் அவ்வளவாக இல்லை தான்.

'ஆத்தாடி என்ன வெய்யில்? என்ன காத்து?'

அவள் பெருமூச்சு விட்டாள். கண் பார்வை மங்கியிருந்தது; உள்ளங்கையால் கண்களைக் கசக்கிவிட்டு நன்ருகப் பார்த்தாள்.

நுங்கும் நுரையுமாகப் பொன்னியில் புது வெள்ளம் சுழித்தோடிக் கொண்டிருந்தது. கரையோரத்தில் வந்து நின்ற அவள் ஒரு முறை ஆற்றைச் சுற்றிப் பார்த்தாள். நடந்துவந்த களைப்புத் தீர மரத்து நிழலில் ஒதுங்கினுள்; பிறகு மெதுவாக நடந்து போய் நாலு வாய் தண்ணீரை அள்ளிப பருகினுள். பசி வயிற்றைக் குடைந்தெடுத்தது.

தன்னைப் பற்றி ஒரு கணநேரம் தெய்வானை சிந்திக்கலானுள்:

'நிலந்தெளியிற நேரத்துக்கு வீட்டைவிட்டுக் கிளம்பினவ; நடந்ததிலேயேபாதிப்பொழுது ஓடியிருச்சி; வீட்டைவிட்டு ஓடியாந்தது ஆயாவுக்குக்கூடத் தெரியாதே. பத்து மாசம் சுமந்து பெற்ற வயிறு என்ன பாடு படுமோ? ஆனு அப்பாரு—அப்பனு அது? அவரு அக்கா மகனும்—அந்த உறமுறைக்காவ நாடோடி ஆளுக்கு நான் பெண்சாதி ஆகனுமாக்கும்? அவரு பார்த்து வச்சிக்கிற மன்மதன் யாருன்னு கூடத் தெரியாதே. ஊம்; போனதை நெனைச்சு என்ன ஆகப்போகுது? அசலூருக்குப்போயி வேலெ செஞ்சு பிழைக்கவேண்டியதுதான். அப்பாலே விட்ட வழி...'

பொறி தட்டும் அளவில் நிரம்பி வழியுமே காட்டாற்று வெள்ளம், அதைப்போலத் தெய்வானையின் கருமணிகள் இரண்டும் கண்கள் வடித்த கண்ணீர் வெள்ளத்தில் அமிழ்ந்து விட்டன. அவள் இளம் நெஞ்சம் நெருப்பாகத் தகித்தது.

கடந்த இரண்டு நாட்களாக வீட்டில் நடந்த சம்பவங்களை ஒன்று கூட்டி நினைத்துப் பார்த்தாள் அவள்.

தெய்வானை அந்த வட்டாரத்தில் ஒரு வடிவழகி. காட்டு மலர். மலர் என்றால் வண்டினத்தின் நாட்டத்திற்குக் கேட்கவா வேண்டும்? தெய்வானையை 'ஆசைக்கண்ணாட்டி' யாக்கிக் கொள்வதில் எத்தனையோ இளவட்டங்கள் 'நான் —நீ' என்று போட்டியிட்டதில் ஆச்சர்யமில்லை. ஆனால் அவள் தகப்பன் வேலப்பனது முடிவு அன்று வெளியிடப் பட்டதும் இளசுகள் அத்தனையும் மூச்சுக்காட்டாமல் வந்த வழியே நழுவிவிட்டார்கள்.

அந்த முடிவு! தெய்வானையைத் தன் தமக்கை மகனுக்குக் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டுக்கொண்டிருந்தான் வேலப்பன். இவ் விஷயத்தை அவன் கூறியபோது தெய்வானை ஒருவித நாணத்துடன் உள்ளே நலியாமல் ஓடிப் போனாள். பிரஸ்தாபித்த நாயகனைப் பற்றிய இன்ப நினைவில் மனதை இழையோடவிட்ட அவள் அதே நிமிஷத்தில் அந்த ஆசை முகத்தைப் பற்றிச் சிந்தித்தாள். ஆனால் அவள் மனத்திரையில் எந்த நினைவு முகமும் நிழலாட வில்லை. ஆம்; அவள் அப்பன் கூறிய அந்த 'மச்சான்' பிள்ளைப் பிராயம் முதலாகவே அக்கரைச் சீமையிலிருந்தவன். மேலும், சில நாள் முன்னரே சொந்தக் கிராமத்துக்கு மீண்டும் வந்திருந்தான். அவனைத் தெய்வானை ஒரு தரம்கூடப் பார்த்தது கிடையாது. அதனால் அவனைப் பற்றி எவ்விதத் தகவலும் தெரிந்திருக்க நியாயமில்லை தானே ?

வாழ்க்கையில் நினைப்பதற்கும் நடப்பதற்கும் ஏனோ தொடர்பற்று மாறாகவே அமைந்துவிடுகின்றது !

ஒரு நாள்! அந்தி சாயும் நேரம்!—

தெய்வானை கிணற்றிலிருந்து தண்ணீர்க் குடத்துடன் கைகளை வீசியவாறு நடந்து வந்துகொண்டிருந்தாள். அம்

போதுகூட அவள் வரப்போகும் எதிர்கால நாயகனைப்பற்றிய இன்ப நினைப்பிலேதான் திளைத்துவிட்டிருந்தாள். ஆனால்...!

அவளை வரவேற்பவளைப்போல முன்வந்து நின்ற பூவாயியைக் கண்ட தெய்வானை "பூவாயி" என்றாள்.

"தெய்வானை, ஒனக்குக் கண்ணாலமாமே...எங்கிட்டக் கூடச் சொல்லக்கூடாதா?"

"நீதான் எல்லாத்தையும் தெரிஞ்சி வச்சிருக்கியே!"

"வடக்குத்தெரு வள்ளி சொல்லாட்டி எனக்கெங்கே தெரியப் போவுது! சரி, மாப்பிள்ளை யாருடி அம்மா?"

"கண்டிச்சீமையிலிருந்து வந்திருக்காருல்ல..."

"யாரு, சோமு மச்சானா?"

"ஆமா!"

"ஒன் தங்கமான கொணத்துக்கு..."

முக்கியமான கட்டத்தில் சினிமாப் படம் அறுந்துவிட்டால் பார்ப்பவர்கள் மனம் எவ்வளவு வேதனைப்படும்? அதைப்போலத்தான் தெய்வானையும் துடிதுடித்துப் போனாள். பூவாயி மீண்டும் தொடர்ந்தாள்.

"தெய்வானை, நீ எனக்கு உசிருக்குசுரு. என் காதிலே எட்டினதை ஒங்கிட்டே சொல்லாமயிருக்க முடியுமா? ஒன் அப்பாரு பார்த்திருக்கிற மாப்பிள்ளை பெரிய காலியாம்; நாடோடியாம்; அக்கரைச்சீமையிலே செகப்புத் தொப்பிக்காரங்களுக்கெல்லாம் எப்பவும் இவரு மேலே ஒரு நோட்டமாம்! காதும் காதும் வச்சமாதிரி ஒரு ஆளு அதைச் சொன்னான்."

அவ்வளவுதான்; கிறுக்குப் பிடித்தவளைப்போல ஓடினாள் தெய்வானை; அந்த மச்சானைக் கல்யாணம் பண்

ணிக்கொள்ள முடியாதென்று கண்டிப்பாகத் தகப்பனிடம் சொல்லிவிட்டாள்.

"என்ன, முடியாதாங்காட்டி" என்றான் வேலப்பன்.

"ஆமா; காலிப் பயலின்னு ஊரெல்லாம் பேசுது. அந்த மனுசனைக் கட்டிக்கிட என்னாலே முடியாது" என்றாள் தெய்வானை அழுத்தந் திருத்தமாக.

"ஏலே, யாரு காலி? என் அக்கா மவனு காலி? ராஜா வாட்டமாயிருக்கிறான்! அவனைக் கண்ணாலம் பண்ணிக்க அதிருஷ்டம் வேணுமா? அதிர்ஷ்டமாவது, மண்ணாவது? ஊம்; கவுண்டன் திட்டம் போட்டா போட்டதுதான். செல்லி, உன் மகள்கிட்டே சொல்லிப்போடு. வார கௌமைக்குப்பரிசம் போடணும். மாப்பிள்ளை அதே காலிப்பயல் தான். தெய்வானைக்குச் சொல்லு. ஆமா; அப்புறம் பெத்த மகளாச்சேன்னுகூடப் பார்க்கமாட்டேன். அது தலையைக் கொடுவாளுக்குப் பலி கொடுத்திடுவேன்" என்று கர்ஜித்தான் வேலப்பக் கவுண்டன். பக்கத்தில் நின்ற அவன் மனைவியின் மூளை கலங்கியது.

தகப்பனின் இறுதி மொழிகளை, திட்டவட்டமான தீர்ப்பை நினைத்துப் பார்த்த தெய்வானை 'ஐயோ' என்று அலறினாள்.

உள்ளக் கடலில் ஆர்ப்பரித்த நினைவு அலைகள் ஓய்ந்தவுடன், சுய நினைவு வரப்பெற்றாள் தெய்வானை; நீர் நிறைந்த கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள்.

அதேசமயம் ஆற்று வெள்ளத்தைப் பிளந்துகொண்டு 'ஐயோ' என்ற சத்தம் வெடித்துக் கிளம்பி அவள் காதுகளில் எதிரொலித்தது.

திடுக்கிட்டுத் திரும்பினாள். கரையை ஒட்டினாற்போல் ஆற்றோடு ஒரு உருவம் மிதந்து வந்துகொண்டிருந்தது! என்ன தோன்றியதோ, சட்டென்று தெய்வானையும் ஆற்றினுள் குதிக்க அடியெடுத்து வைத்தாள். வைத்தவள் ஒரு கணம் அவ்வுருவத்தை நிமிர்ந்து பார்த்தாள். அந்த உருவத்தின் கம்பீரமான அழகிய முகத்தைக் கண்டு அப்படியே நின்றுவிட்டாள்.

அவளோ கன்னிப்பெண், உலகமறியாதவள். ஆனால் உலகம் அறியவேண்டியவள். சந்தர்ப்பத்திற்குக் காத்திருக்கிறாள். அவன் யாரோ? முன்பின் தெரியாத அந்த இளைஞனை எப்படிக் காப்பாற்றுவது?

எண்ணங்கள் சுழன்றன. மறுதரம் அந்த முகத்தை நோக்கினாள். அதில் கலவரமும் பயமும் பூசியிருந்தன. மனம் இளகியது. அவள் திடம் பெற்றாள்.

மேல் சேலையை இடுப்பைச் சுற்றி வரிந்து கொண்டு தன் கைகளை நீட்டி ஆபத்துக்கு உதவ முன் வந்தாள். அவள் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது.

அடுத்த விநாடிகளில் அவன் கரைசேர்க்கப்பட்டான். தன்முன் உயிர் பெற்று நிற்கும் அந்தக் கம்பீர உருவத்தைக் கண்டவுடன் தெய்வானைக்கு மெய் சிலிர்த்தது. அவளுடைய கண் இமைகள் சிட்டுக்குருவியைப்போலச் சிறகடித்தன.

அவள் அவனைப் பார்த்தாள்; அவனும் அவளைப் பார்த்தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தார்கள். பார்த்துக் கொண்டே இருந்தார்கள். பேசவில்லை; ஆம்; கண்கள் தாம் பேசுகின்றனவே. அவள் காந்தம். அவனோ;

இரும்பு! காந்தமும் இரும்பும் ஒன்றையொன்று இழுத்துக் கொண்டன. வேறு என்ன வேண்டும்?

"மச்சான்"

அவள் குரல் குயிலைப்போல ஒலித்தது.

"ஆமாம்; இந்த மச்சான் எம்பிட்டு அழகா, நல்லவரா இருக்காரு. எம் மனசு இவரைக் கண்டதும் எப்படி அவரு கிட்டே லயிச்சிருச்சு. இவரையே கண்ணாலம் செஞ்சிக் கிட்டா"—தெய்வானையின் ஆசை இன்பவலை பின்னியது.

தெப்பமாக நனைந்து நின்ற அந்த இளைஞன் அரைக் கணத்தில் வேட்டியைப் பிழிந்து கட்டிக்கொண்டான். இன்னும் அவன் மௌனமாகவே இருந்தான்.

"மச்சான், பேசமாட்டிங்களா?"

வலுவில் அழைத்துப்பேச எத்தனிக்கும் அவளது போக்கை மனத்திற்குள்ளாகவே எண்ணிச் சிரித்துக் கொண்டான் அவன்.

"ஒன் பேரு தெரிஞ்சாத்தானே நானும் பதிலுக்குப் பேசலாம்."

அவன் வாய் பேசியது; கண்களும் பேசின.

உதட்டைப் பிரித்து மெல்லத் தலை தூக்கியிருந்த பற்களிடையே தன் தளிர் விரலை லாவகமாகத் திணித்தவண்ணம், புன்னகை பூத்தாள் அவள்.

"ஏதேது, கிண்டல்கார ஆளுதான் போலே."

வரிந்து கட்டியிருந்த சேலையைத் தளர்த்திவிட்டு, கூந்தலை அவிழ்த்துக் கொண்டை போட்டுக்கொண்ட

அவளது கொள்ளை வனப்பில் பேதலித்தான் இளைஞன்.

"அது சரி, ஒன் பேருதான் என்ன ?

"தெய்வானை."

"தெய்வானை, ஊம்; நல்லாத்தான் இருக்கு; வயசுப் பொண்ணு இம்மா வேளையிலே எங்கே பயணப்பட்டே ? நீ எந்த ஊரு?" என்று மறுபடியும் கேள்விகளை அடுக்கினான்.

தெய்வானை விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே தன் 'கதை'யைச் சொன்னாள்.

"தெய்வானை அந்த ஊர் சுற்றியைக் கட்டிக்க மனசில்லாம ஓடி வந்திட்டியா? ஆனா, யோசிக்கிறப்ப நானும் ஒரு ஊர் சுற்றி தானே. என்னை..." என்று நிறுத்தினான் அவன்.

"மச்சான், விளையாட்டு அப்புறம் ஆகட்டும். உங்களைக் கண்டதும் என் மனசு எப்படியோ இருக்கு. உங்களைத் தான் கல்யாணம் பண்ணிக்கிடணும்னு மனசு ஒரே குதியாக் குதிக்குது. ஆமா, மறந்தே போயிட்டேன். நீங்க எப்படி இந்த ஆத்திலே விளுந்திங்க...ஐயோ..." என்றாள் அந்தப் பட்டிக்காட்டுப் பாவை.

'கால் வழுக்கி விழுந்துவிட்டதாகச் சம்பவத்தைக் கூறிய இளைஞன் மீது நிறைய அனுதாபப்பட்டாள் அவள்.

"மச்சான், ஒண்ணு சொல்லுறேன். கோவிச்சுக்க மாட்டிங்களே? நம்ப ரெண்டு பேரும் எங்க வீட்டுக்குப் போய், அப்பாவைச் சமாதானப்படுத்தி அங்கேயே இருந்திடலாம். நீங்க என்ன சொல்றீங்க?" என்றாள் தெய்வானை.

அதே மின்வெட்டின் சுழலில், "என்ன, அப்பனைச் சமாதானமா செய்துடுவே, ஊர்ப்பயலோடு ஓடியாந்துட்டு

என்று கூக்குரலிட்டவாறு கண்களில் கனல் பறக்க எதிரே வந்து நின்றான் தெய்வானையின் தந்தை. கவுண்டனைக் கண்ட அவள் 'வெல வெல' த்துப் போனாள். இளைஞனின் பிடியிலிருந்த அவள் கரங்கள் தானாக நழுவி விழுந்தன.

மறுகணம் "ஒருவயசுப் பெண்ணை வலைபோட்டு ஏமாத்த உனக்கு எத்தனை ஆணவம்..." என்று கர்ஜித்தவண்ணம் கையில் சுழன்ற கழியை அந்த யுவன் பக்கம் வீசினான் வேலப்பன். குறி தவறவில்லை. ஆனால் வீசி எறிந்த கழியைக் குறுக்கிட்டு முன்னோடித் தடுத்த தெய்வானையின் நெற்றியை அந்தக் கம்பு தாக்கிற்று.

அதே நேரம் "ஐயோ தெய்வானை" என்று அலறிக்கொண்டு, அவள் மூர்ச்சித்து விழுந்த இடத்துக்குப் பாய்ந்தான் அந்த இளைஞன். அவள் நெற்றியிலிருந்து ரத்தம் பெருகியோடியது; தன் வேட்டியால் துடைக்க ஆரம்பித்தான்.

"ஏ, தொடாதே, என் மகளைத் தொட ஒனக்கு யோக்கிதை இல்லை. இந்தாப்பாரு, இந்த வீச்சோடே உன் உசிரையும் வாங்கிப்பிடறேன்" என்று உருமிக்கொண்டு மறுபடியும் கம்பைக் குறி பார்த்து அந்த இளைஞன் மீது வீசப்போனான் கவுண்டன்.

"ஐயையோ, மாமா..." என்ற எதிரொலி கிளம்பிற்று.

கவுண்டன் தலையை உயர்த்தினான். கைப்பிடியிலிருந்த தடி தரையில் விழுந்தது.

"யாரு சோமுவா? இந்த நாடகமெல்லாம் என்ன? ஐயோ, ஆத்திரத்திலே உன்னைக் கவனிக்கவில்லையே! கொஞ்சம் தப்பி நீயும் என்னை அழைக்காட்டி என்ன நடந்திருக்குமோ?"

"மாமா, தெய்வானையை எனக்குத்தான் கண்ணாலம் செய்யணுமின்னு நீங்க முடிவு சொன்னதுக்கு, ஊரிலே யாரோ கட்டிவிட்ட புரளியைக் கேட்டு அது எனக்கு வாழ்க்கைப்பட மறுத்துப் புறப்பட்டிருச்சு. தூண்டில்காரனுக்கு மிதப்புமேலே தானே கண்ணு? எல்லாத்தையும் கவனிச்சுக்கிட்டே நானும் அதோடேயே பின்னுக்குத் தொடர்ந்தேன். கடைசியா அது களைச்சு ஆற்றுக்கரையிலே குந்தினதையும் கவனிச்சேன். ஒரு யோசனை ஓடிச்சு. என்னைத்தான் அதுக்கு அடையாளம் தெரியாதே. ஆற்றிலே தவறி விழுந்து அம்பிட்டுக்கிட்டவன் மாதிரி நடிச்சு, அது மனசையும் என் பக்கம் இழுத்துக்கிட்டேன். என்னைக் கண்டதும் உயிரை எம்பேரிலே வச்சிடுச்சி. ஆனா நான்தான் உங்க அக்கா மகன் என்கிறது மட்டும் தெரியாது."

சோமு, இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே தெய்வானை குறுக்கிட்டாள்.

"மச்சான், என்னை மன்னியுங்க. உங்களை இதுக்கு முந்தி பார்த்தது கிடையாது. பூவாயி உங்களைப் பத்திச் சொன்ன அவதூறைக் கேட்டு மோசம் போனேன்".

மேலே ஏதோ கூறவிருந்த தெய்வானையைக் குறுக்கிட்டு "தெய்வானை, யாருசொன்னது? பூவாயியா? அதுவா என்னைப்பத்திப் புரளி சொன்னது?" என்று சரமாரியாகக் கேட்டான் சோமு.

அப்பொழுதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது.

"பாவம், யாரோ ஒரு வயசுப்பொண்ணு ஆத்துச் சுழலிலே அம்பிட்டிருச்சு. இந்த மட்டும் தப்பிச்சதுக்கு அது

எவ்வளவு அதிர்ஷ்டம் செஞ்சிருக்கவேணுமோ...” என்று கூறியபடி நாலைந்து பேர்கள் ஒருபெண்ணைக் கைப்பிடியாகக் கொணர்ந்து மரத்தடியில் கிடத்தினார்கள்.

ஓடிச் சென்ற சோமு அப்பெண்ணைக் கூர்ந்து நோக்கினான். உடனே அவன் அலறிவிட்டான். அவள்தான் பூவாயி; அவனுக்கு அவளும் முறைப்பெண்தான். அவள் அவன்மீது ‘காதல்’ கொண்டிருந்தாள்.

பூவாயியை இந்நிலையில் பார்க்க நேர்ந்த தெய்வானையும் பிரமித்து விட்டாள்.

லேசாகப் பிரக்ஞை வரவே பூவாயி கண்களைத் திறந்தாள்; தன் மச்சானை அப்படியே விழுங்கிவிடுபவள் போல வெறித்துப் பார்த்தாள்.

“மச்சான், நீங்களும் தெய்வானையும் என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னியுங்க. உங்களை நானே கட்டிக்கிட வேணுமிங்கிற ஒரே ஆசையிலே உங்களைப்பத்தி இல்லாததும் பொல்லாததுமாத் தெய்வானைகிட்டே சொன்னேன். அதன் பொன்னான மனசைக் கலைச்சுப்புட்டேன். ஆனால் என் ஆசைக்கனல் என்னையே எரித்து விட்டது. கொஞ்ச முந்தி நீங்க ஆத்திலே திடுமின்னு குதிச்சதைப் பார்த்ததும், உங்களோடேயே பின்னாலே வந்த நானும் தண்ணியிலே குதிச்சுப்புட்டேன். நீங்க இல்லாம எனக்கு என்ன வாழ்வுன்னுதான் அப்படிச் செய்தேன்.”

பூவாயி தேம்பினாள். அவள் பார்வை சோமுவின்மீது ஆரோகணித்திருந்தது; தலையைக் குனிந்து மெல்ல அவள் நெற்றியைத் தடவிக் கொடுத்தான் சோமு. தன்னிடம் பூவாயி கொண்டிருந்த அந்தரங்கக் காதலை நினைத்துப்

பார்த்தான், கருப்பையில் வளர்ச்சியுறும் சிசுவை எண்ணும் தாய்போல.

"மச்சான்."

"பூவாயி."

"உங்க பக்கத்திலேயே சாகிறேன். உங்களைப் பார்த்துக் கொண்டே சாகிறேன். இது ஒண்ணே என் ஆசையைத் தீர்த்து வைச்ச மாதிரி, மச்சான்..."- அதற்குப் பிறகு அவள் உதடுகள் அசைவதை நிறுத்திக்கொண்டன. அவள் இதயமும் ஒலிப்பதை நிறுத்திக்கொண்டது.

சோமு நினைவிழந்தான்!

*வள்ளி—ஆம்; அவள் தியாகரூபி; அன்பின் உயிர்ச் சின்னம். வறுமைக்கு அஞ்சித் தாய்மையைத் திரணமாக மதித்துவிட்டாள்! ஆனால்...?*

# தாய்

'ஷாந்தி நிவாஸ்' முன்பு வந்து நின்ற 'ஆட்டோரிக்ஷா'விலிருந்து இறங்கிய டாக்டர் நளினாவை வரவேற்கக் காத்திருந்தவள் போல ஓடோடி வந்தாள் வேலைக்காரி வள்ளி. அவளை ஒரு முறை ஏற இறங்கப்பார்த்தாள் நளினா. மலர்ச்சி பதிந்திருந்த வள்ளியின் வதனத்தில் பெருமிதமும் பூரிப்பும் மிதந்திருந்தது. இதைக் கண்ட நளினாவின் உள்ளத்தில் அறுந்துபோன சங்கிலித் தொடர்போல எண்ணங்கள் குதித்தெழுந்தன.

வள்ளியைப் பின் தொடர்ந்த டாக்டர் நளினாவை சாஜோபசாரத்துடன் வரவேற்றாள் காந்திமதி. அவள் தான் அந்தப் பங்களாவின் சொந்தக்காரி. நெடுநாளைய தவப்பயனாக அதிர்ஷ்ட பாக்கியமுடன் பெற்ற தன் ஒரே மகளுக்கு அன்று ஆண்டு நிறைவு விழா ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. விருந்துக்கு நளினா அழைக்கப்பட்டிருந்தாள்.

"வாருங்கள், அம்மா"

பின் சென்ற நளினாவின் கண்கள் சுழன்று நாற்புறமும் ஓடின; இன்ப நாதமும் அத்துடன் வீசிய நறுமணமும் அவளுக்கு அமைதி யூட்டின.

பஞ்சணை பதிந்த தூளியில் படுத்திருந்த குழந்தையை அன்புடன் தூக்கி நளினாவிடம் கொடுத்தாள் காந்திமதி. தங்கப் பிரதிமையாய் சர்வ அலங்கார பூஷிதையாய்ப் பரிணமித்த குழந்தை ஜயந்திக்குச் சந்தோஷம் தாளவில்லை. குழிவிழச்சிரித்த அதன்பட்டுக் கன்னங்களில் உதயத்தின் செக்கர் அடிவர்ணமிட்டிருந்தது. நளினாவையும் அருகில் தன்னையே விழுங்கிவிடுபவள்போன்று இமை கொட்டாமல் பார்த்து நின்ற வேலைக்காரியையும் மாறிமாறிப் பார்த்தது குழந்தை. நளினா பெருமூச்செறிந்தாள். வள்ளியின் கண்களில் நீர் நிறைந்தது.

நாற்காலியில் அமர்ந்திருந்த டாக்டர் நளினாவின் தலைக்கு மேல் சுவற்றில் மாட்டியிருந்த பெரிய போட்டோவைக் கவனிப்பதைக் கண்டு காந்திமதி, "டாக்டர் அம்மா, குழந்தை பிறந்து ஒரு வருஷம் பூர்த்தியாகிவிட்டது; இந்தப் பிறந்த நாள் வைபவத்திற்கு 'ஐயா' மட்டும் உயிரோடிருந்திருந்தால்"-என்று கூறியவள்மேலே தொடர்ந்து பேசமுடியாமல் தத்தளித்தாள். துக்கம் நெஞ்சை இறுக்கியது. கண்கள் நீரைக் கொட்டின. காந்திமதியின் கணவர் ராவ்பகதூர் சிவசைலம் ஓர் குறிப்பிட்ட புள்ளி. தன் மனைவி பிரசவிக்க ஒருமாசத்துக்கு முன் மாரடைப்பால் இறந்துவிட்டார். எதிர்பாராத தன் கணவன் பிரிவில் ஓரளவு ஆறுதல் கொடுத்து வந்தது அவளுடைய மகள்தான்.

"அம்மா, நல்ல நாளில் கண் கலங்கலாகாது என்பார்கள். விதியின் விசித்திரத்துக்கு நாம் என்ன செய்ய

முடியும்? வருந்தாதீர்கள்" என்று கூறிக் குழந்தையைக் காந்திமதியிடம் நீட்டினாள் நளினா.

அப்படியே வாரியணைத்து உச்சிமோந்தாள் காந்திமதி. அதேமாதிரி தானும் முத்தமிட்டுக் கொஞ்சவேண்டும் போலத் துடித்தாள் வள்ளி. முன் ஒரு தினம் குழந்தையிடம் தன்னைமறந்து கொஞ்சிக் குலாவுவதைக் கண்டு எரிந்து விழுந்த தன் எஜமானியம்மாள், அதேபோல், இன்றும் தவறாக எண்ணிவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம் அவள் ஆசைக்கு மாற்றம் கொடுத்தது. ஆம்; அவள் வேலைக்காரியாயிற்றே!

விருந்து முடிந்தது,

"டாக்டர் அம்மா, உங்களுக்குத்தான் என்றும் கடைமைப் பட்டிருக்கிறேன். எப்போதும் என்மீது தங்களுக்கு இருக்கும் பரிவும், நினைவும் குறையவே கூடாது. ஜயந்தியையும் மறந்துவிடக்கூடாது" என்று உணர்ச்சியுடன் கூறி முடித்த காந்திமதி, மேஜை மீது தயாராக வைத்திருந்த பழம் பட்சணம் நிறைந்த பையை நீட்டினாள் நளினாவிடம்.

வள்ளி வழி அனுப்ப வந்தாள். சோகம் படர்ந்த கண்களால் பரிதாபத்துடன் நளினாவை நோக்கினாள். புருவங்கள் முறியுண்டு விம்மின.

"அம்மணி, இப்பொதெல்லாம் ஜயந்தியை எடுத்துக் கொஞ்சக்கூட விடமாட்டேன் என்கிறார்கள் எஜமானி அம்மாள். குழந்தை மீது அவர்களுக்கு உயிர். சதா பின்னையுங் கையுமாகக் குலவி விளையாடுவதைப் பார்க்கப் பார்க்க எனக்கும் அப்படியெல்லாம் விளையாடவேணுமென்று தோன்றுகிறது. ஆனால், அவ்விதம் முடிகிறதா? ஏனோ என்மீது அவர்களுக்கு வர வர எரிச்சல் பெருகிவிட்

டது. அம்மா, குழந்தையை நினைக்கும்போதுதான் மனதை என்னவோ பண்ணுகிறது... அம்மா...'

பூடகமாகச் சுட்டிக்காட்டி, சபலக்குழந்தைபோல விம்மினாள் வள்ளி. அவளை நெருங்கி ஆறுதல் மிகச் சொன்னாள் நளினா. ஆனாலும் அவள் அழுகை அடங்கவில்லை. கண்ணீர் பிரவகித்தது. இருள் மூடப்பட்ட அவள் இதய வானில் மின்னல் கீற்று ஒன்று வெடித்துச் சிதறியது. அதே மின்னல், பின் பொழியவிருக்கும் கடும் மழையின் அடையாளமோ, என்னவோ!

* * *

பிரசவ வார்டில் அன்று டாக்டர் நளினாவுக்கு இரவு 'ட்யூட்டி'. நோயாளிகளிடமிருந்து வெளிக்கிளம்பும் முனகல் சப்தங்களைத் தவிர வேறு எத்தகைய அரவமுமில்லை, ஆஸ்பத்திரியின் சூழ்நிலையில் மிதமிஞ்சின அமைதி பரிபாலித்திருந்தது.

ஒரு தவணை வார்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து உட்கார்ந்தாள் டாக்டர் நளினா. நேற்று குழந்தை ஜயந்தியின் ஆண்டு நிறைவுக்குச் சென்று வந்தசமயம் வேலைக்காரி வள்ளி கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அப்படியே அவளைச் சஞ்சலத்திற்குள்ளாக்கின. இப்படிப்பட்ட மனமாற்றம் வள்ளிக்கு ஏற்படும் என அவள் எப்படி நினைக்க முடியும்? வள்ளிசொல்லிப்போன வார்த்தைகளைத் திரும்பவும் எண்ணிப் பார்த்தாள். மேல்பூச்சாகப் பட்டும் படாததும் கணக்காகச் சொன்ன சாரத்தையும் சிந்தித்தாள் நளினா. வள்ளியின் பிரலாபத்திற்கு ஓரளவு தானும் உடந்தை—பாத்தியதை கொண்டவள் என்பதாக அவள் மனச்சாட்சி அறிவுறுத்தியது. அப்போது அவள் மனம் சொல்லொணாத வருத்தமடைந்தது.

'வள்ளி—ஆம்; அவள் தியாகரூபி. அன்பின் உயிர்ச் சின்னம். வறுமைக்கு அஞ்சித் தாய்மையைத் திரணமாக மதித்துவிட்டாள்'—எண்ணக்கோர்வையினூடே இப்படிச் சங்கமித்து வட்டமிட்டது டாக்டர் நளினாவின் பெண் உள்ளம்.

ஒரு வருஷத்துக்கு முன்னர் நிகழ்ந்தது அந்த அதிசய மிக்க சம்பவம்!

* * *

இரவு 'ஆயாள்' நீட்டி நின்ற 'சார்ட்'டில் கையெழுத் திட்டுத் திரும்பினாள் மிஸ் நளினா.

"மெடர்னிட்டி வார்டில் பிரசவ கேஸ் ஒன்று. ரொம்ப வும் சீரியஸ். போய் ஜாக்கிரதையாகப் பாருங்கள். ராவ் பகதூர் சிவசைலம் மனைவி காந்திமதி" என்று எச்சரித் துச் சென்றார் மேலதிகாரி.

காந்திமதியை வெகு நாளாகப் பரிச்சயம் உண்டு நளினாவுக்கு. காந்திமதிக்கும் நளினாவிடம் தனித்த ஈடுபாடு என்றுமுண்டு. காந்திமதி இதற்குமுன் மூன்று முறை கர்ப்பம் தரித்து அந்த மூன்று முறைகளிலும் சொல்லி வைத்தாற்போலப் பிரசவ அறையிலேயே குழந் தைகள் இறந்துவிட்டன. பிள்ளைப்பேற்றுக்கு நெஞ்சம் நெக்குருகிய காந்திமதியின் பேதையுள்ளம் கருகிவிட்டது. ஒரு சமயம் தற்கொலை செய்துகொள்ளும் நிலைகூட ஏற் பட்டது. வாழ்வில் வெறுத்துப்போன அவளுக்கு இந்த நாலாம் பிரசவம் ஒரு சுபசூசகமாக அமையவேண்டுமென் பது காந்திமதியின் மனோரதம். மேலும், சென்ற மாதம் சற்றும் எதிர்பாராதவிதமாய் அவள் கண் நிறைந்த கண வனும் இறந்துவிட்டார். ஆக, எல்லாமாகச் சேர்ந்து காந்தி மதிக்கு மனத் தளர்வை உண்டாக்கி விட்டது.

பிரக்ஞை யிழந்து படுத்திருந்த காந்திமதியைப் பரிசோதித்தாள் நளினி. அவளுக்குப் 'பக்' கென்றது. குழந்தை இதுவரை பிழைத்திருப்பதென்பது துர்லபம் என்று முடிவிட்டாள். தன் நினைவுப் பிரகாரம் குழந்தையின் கதியும் ஆகிவிட்டால், அப்புறம் காந்திமதியின் வாழ்வும் அத்துடன் முடிந்துவிடுமென்பதைத் தீர உணரலானாள். கொஞ்சிக்குலவித் தன் பெயரைச் சொல்லிக் குலம் விளங்கவைக்க ஓர் சிசுவுக்குத் தவங்கிடந்த அவள் மனோரதம்—கனவு எல்லாம் என்னாகும்?

அடுத்த சில நிமிஷங்களில் ஆயுதப் பிரயோகத்தின் பேரில் குழந்தை சவமாக வெளிப்பட்டது; நினைவு தப்பிக் கிடந்தாள் காந்திமதி. அவள் இருண்ட வாழ்விற்கு விடிவு ஏற்பட வழி........? அந்த இமைப்போதில் மின்னலென ஓர் யோசனை தோன்றியது. அப்படிச் செய்தால்...? மத்தியானம் கண் முன் கண்டகாட்சி அவள்முன் விரிந்தது.

அபலைப் பெண் ஒருவள் பிரசவித்திருந்தாள். வார்த்தெடுத்த தங்கச்சிலைபோன்றிருந்தது குழந்தை. பாவம், அவள் கூறிய விருத்தாந்தம் டாக்டர் நளினியை—உடனிருந்த டாக்டர்களை மனமிரங்கச் செய்தது. சிறுவயசுப் பெண்; தலைப்பிரசவம். அவளுக்கு நாலுமாசமாக இருக்கையில் பிணங்கு சென்ற அவள் புருஷனைப் பற்றி நாளது வரை யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. சோறு கண்ட இடத்தில் வயிற்றைக் கழுவி வந்தாள். பெரிய டாக்டர் உதவியின் பேரில் வள்ளிக்கு வார்டில் இடம் கிடைத்தது. சுகப்பிரசவமாகக் குழந்தைபிறந்திருந்தும், அந்தஇன்பத்தை அவளால் அநுபவிக்க முடியவில்லை. குழந்தை பிறந்ததில் கடுகளவேனும் சந்தோஷப்படவில்லை அத் தாயுள்

ளம். குழந்தையை இனி எங்ஙனம் வளர்ப்பது என்ற அந்த ஒரே கவலையில்தான் பேதை மனம் சுழன்றது. ஒருவேளைச் சாப்பாடுகூடக் கிடைக்காமல் நாள்கணக்கில் பட்டினி கிடந்தவள் வள்ளி. ஆம்; வள்ளியேதான்! யாரைக் குறைக் கூறுவது? அவள் தலைவிதி அப்படி—! இந்த இக்கட்டான நிலையில் தன்னைப்பற்றி அவள் துளிக்கூடக் கவலைப்படவில்லை. ஆனால், தன் ஏழைக் குழந்தைக்குப் பால் புகட்ட வழி ஏது?

கண்ணீர் ததும்பக் கூறிய வள்ளியின் குறையைச் சிந்தித்துப் பார்த்தாள் நளினா.

அங்கே ஒரு சிசுவிற்காக வருஷக்கணக்கில் தவங்கிடந்த பணக்காரி காந்திமதி! இங்கே பிறந்து கிடக்கும் குழந்தையை எப்படிப் போஷிப்பது என்று ஏங்கித் தவிக்கும் ஏழைப் பெண் வள்ளி!

அந்த ஆசை கனவை—அதாவது வள்ளியின் குழந்தையைக் காந்திமதியின் படுக்கையில் கொண்டுவந்து கிடத்த வேண்டியது; காந்திமதியின் இறந்த குழந்தையை அப்புறப்படுத்த வேண்டியது. சுவர்ணவிக்கிரகம் போலிருக்கும் குழந்தையை யார்தான் சந்தேகிக்கக் கூடும்? டாக்டர்களைக் கலந்து யோசித்தாள் நளினா. அவர்களும் சம்மதம் கொடுத்தனர். இந்த ஒரு கைங்கரியத்தின் மூலம் வள்ளியின் சஞ்சலத்திற்கும் வழி பிறக்கும்; சந்தானபாக்கியத்துக்குத் தவங்கிடந்த காந்திமதிக்கும் பிள்ளைப்பேறு கிட்டிவிடும். அதன்படியே எல்லாம் ஏற்பாடாகிவிட்டன காதும் காதும் வைத்தாற்போல!

அத்துடன், வள்ளிக்கும் காந்திமதியின் பங்களாவில் வேலை வாங்கித் தருவதாக உறுதி கூறினாள் நளினா. வள்ளி

அவள்முன் ஓர் ஒப்பற்ற பிறவியாகவே தோற்றமளித்தாள். தன்மீது இத்துணை கருணைகொண்ட நளினாவின் பெருந்தன்மையைக் கண்ட வள்ளி அமைதி பெற்றாள்; புன்முறுவல் பூத்தாள். ஆனால் அவள் பெற்ற மனம் உள்ளூரக் குமைந்ததை யார் அறிவார்கள்.

சுயநினைவு பெற்றுக் கண்விழித்த காந்திமதி, அருகில் கிடத்தப்பட்டிருந்த குழந்தை அலறுவதைக் கேட்டுத் திகைத்தாள். குழந்தையைத் திரும்பத் திரும்ப ஆசையுடன்பார்த்தகாந்திமதிக்கு அப்போதுதான் உயிர் மீண்டும் பெற்றவள்போல நெடுமூச்சுவிட்டாள். பெற்ற மனம் பூரித்தது. உள்ளம் குழைந்தாள். குழந்தையை எடுத்தாள்; அணைத்தாள்; முத்தமிட்டாள்; அதுசமயம் ஆகாயத்தில் 'ஜம்' மென்று சிறகடித்துப் பறப்பதாகப் பட்டது காந்திமதிக்கு.

திரைமறைவில் நின்று எல்லாவற்றையும் கண்வலிக்கப் பார்த்து நின்ற நளினாவிற்கு ஏதோ ஒரு மகத்தான காரியத்தைச் சாதித்து முடித்து விட்டதாக உள்ளநிறைவு ஏற்பட்டது. கைநொடி நேரத்தில் நளினாவின் பெண்மனம் உருவகித்த மாறுதல்-சோதனையின் விளைவை காந்திமதி எங்ஙனம் உணர்ந்திருப்பாள், பாவம்?

* * *

அன்று காலையில் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் டாக்டர் நளினா. "அம்மா" என்று அலறிக் கொண்டு பீதியுடன் ஓடிவந்த வேலைக்காரி வள்ளியைக் கண்டதும் கலவரமடைந்தாள்.

"அம்மா, இருந்திருந்தாற்போல எஜமானி அம்மாவுக்கு மயக்கம் வந்து அப்படியே சுருண்டு படுத்திருக்கி

ருங்க. நினைவு சுத்தமாய்க் கிடையாது. கொஞ்சம் வந்து பாருங்க, அம்மா''

காந்திமதி பிரேதம்போலப் படுத்திருந்தாள். கண்களை மிரண்டு விழித்தாள். சிறிது நாழிகையானதும் நளினு மெல்ல அவளைத் தலையணையில் சாய்த்து வைத்துச் சோதித்தாள். சுயஉணர்வு அப்போதுதான் சிறிதுவந்தது. நளினுவை ஆதரவுடன் நோக்கி, ''டாக்டர் அம்மா, இனி நான் பிழைப்பேன் என்று தோன்ற வில்லை. என் கணவர் சென்றவழிதான் எனக்கும் ஏற்படப்போகிறது; நான் சாவதற்குப் பயப்படவில்லை. ஆனால் என் அருமை மகள் ஜயந்தியின் எதிர்காலம் எனக்குப் பின் என்னுவது என்பதை நினைக்கும்போதுதான் மனம் அனலைக்கண்ட தங்கமாய்த் தகிக்கிறது. என் குழந்தையை யாரிடம் ஒப்படைப்பது...ஐயையோ''—தேம்பினாள் காந்திமதி. வள்ளி பக்கத்தில் நடுங்கியவாறு திகைத்து நின்றாள்.

திரும்பவும் 'டெஸ்ட்' செய்தபின், கேஸ் பிழைக்காது என்பதை நிர்ணயித்த நளினுவிற்குக் காந்திமதியைப் பார்க்கக், கண்கள் கலங்கின.

''காந்திமதி, கவலைப்படாதீர்கள். உங்கள் குழந்தை, ஆம்; அதற்குத் தாய் அங்கம்பெற, உங்கள் உரிமையைப் பங்கிட்டுக்கொள்ள ஒருவள் ஏற்கெனவே காத்திருக்கிறாள். அவள்தான் உங்கள் வேலைக்காரி வள்ளி. இனி உங்கள் ஜயந்தியைப் பற்றிச் சிறிதும் கவலை வேண்டாம்.....''

''என்ன, இருந்திருந்து வேலைக்காரியிடமா என் அருமை மகளை ஒப்படைக்கக் கூறுகிறீர்கள், டாக்டர் அம்மா?'' என்று அலறினாள் காந்திமதி.

"அம்மா, அதிசயமோ ஆத்திரமோ கொள்ளாதீர்கள். சொல்லப்போனால் நீங்கள் பெரிதும் கடமைபட்டிருக்கின் றீர்கள் வள்ளிக்கு. அவள் மாத்திரம் அன்று மனம் ஒப் பாதிருந்திருந்தால் உங்கள் வாழ்வு எப்படித் திரும்பியிருக் குமோ யார்கண்டது? உங்கள் குழந்தைக்குப் பூரண உரிமை பூண்டவள் வள்ளி. அவள் வயிற்றுக் குழந்தை ஜயந்தி! நான்காம் முறையும் நீங்கள் பிரசவித்த குழந்தை இறந்து விட்டது. அச்செய்தி உங்களுக்கு அறிவிக்கப்பட்டால்- பாவம் உங்கள் நிலை என்னாகுமோ என்ற பச்சாத்தாபத்தி னால் அதேநாள், வள்ளிக்குப் பிறந்த சிசுவை, நினைவு இழந்துகிடந்த உங்கள் அண்மையில் கிடத்தினேன். உங் கள் பாக்கியம் பெரிய டாக்டர் சம்மதித்தார். அதன்மூலம் வள்ளிக்கும் வழி பிறந்தது தான் பெற்ற மகளைப் பராம ரிப்ப தெப்படி என்று திகைத்த அவள் கவலையையும் போக்கமுடிந்தது. இப்படி நிகழ்ந்த சம்பவத்துக்கு சந் தர்ப்பங்களும் பெரிதும் உதவின. வாஸ்தவம் தான்; விதி இப்படிவ ள்ளியைக் கூட்டுவித்தது. உங்கள் வாழ்க்கையும் திரும்பியது" என்று முடித்தாள் நளினி.

இந்த வரலாற்றைக் கேட்டதும் காந்திமதிக்கு வியப்பு ஏற்படவில்லை. வியப்பு ஏற்படாததைக் கண்டு டாக்டர் நளினிதான் வியந்தாள். காந்திமதியின் கண்களினின்றும் நீர் சிந்த, சிலையாக நின்று கொண்டிருந்த வள்ளியை ஒரு முறை ஏறிட்டு விழித்து "வள்ளி, நீ மனிததெய்வம். உன் தாய்மையை என் பொருட்டுத் தியாகம் செய்தாய். ஆமாம்: உன் குழந்தை ஜயந்தி. தன்னலமற்ற உன் தியாகத்திற்கு இன்னும் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். ஜயந் திக்கு இனி தாய் கிடைத்துவிட்டாள். இனி நான் நிம்மதி யுடன்சாகிறேன்; நான் கொடுத்துவைத்தவள். வள்ளி, ஒரு

வேண்டுகோள்! எனக்குப்பின் என் சொத்து முழுவதும் உன்னுடையது. ஜயந்தியைச் சேர்ந்தது. என் வாரிசு நீங்களே...வள்ளி, மறுத்துவிடமாட்டாயே..." என்றாள் காந்திமதி. அதோடு அவள் உயிர் வடிந்தது!

அப்படியே அலறியடித்து விழுந்த வள்ளி, பிணமாகக் கிடந்த காந்திமதியை உற்றுப் பார்த்துத் திரும்பினாள்.

"டாக்டர் அம்மா, நான் பாவி. எஜமானி அம்மாளின் வாழ்விற்கு முற்றுப்புள்ளியிட்ட கிராதகி நான். என்னால் தான் அம்மா இறந்தார்கள். உங்களுக்கு முன்பே உண்மையைக் கூறிவிட்டேன். அந்த அதிர்ச்சிதான் அவர்களைக் கொன்றது."

"என்ன, நிஜமாகவா வள்ளி?" என்று கம்மிய குரலில் கேட்ட நளினி பிரமித்துப் போனாள்.

"ஆம், அம்மா! அன்று வறுமைக்குப் பலியிட்டேன். என் தாய்மையை. நாளடைவில் என் மனதைக் கசக்கிப் பிழிந்தது தாய்மைக்குணம். சேற்றில் முளைத்த தாமரை போல இந்த ஏழைக்குப் பிறந்த என் மகளைக் கொஞ்சிக் குலாவும் எஜமானி அம்மாளைப் பார்க்கும் ஒவ்வொரு சமயத்திலும் ஏனோ என் உள்ளம் தத்தளித்துப் போகும். அப்படியே எஜமானியைக் கொன்றுவிடலாமா என்று வரும். முன்பு ஓரொரு சமயத்திலாகிலும் ஜயந்தியை எடுத்து முத்தமிடச் சந்தர்ப்பம் கிடைக்கும். அத்தகைய பாக்கியம் கூட இந்த நாலைந்து மாதமாகக் கிட்டவில்லை; பெற்றமனம் ஜயந்தியை - என் மகளைத் தியாகம் செய்ய மறுத்தது. ஜயந்தியை எம்முறையிலும் காந்திமதி அம்மாவிடமிருந்து பிரிக்கமுடியாதென்பதையும் அறிந்தேன். உண்மையைக் கூறிக் குழந்தையை அடைய மனம் துடித்தது. நான்

என்ன செய்வேன்? ஏழையானாலும் தாய்தானே......எண்ணமும் ஈடேறியது. அம்மா, நான் மன்னிக்கக் கூடாத பாவம் செய்தவள். மேலும், எஜமானி அம்மாவின் சொத்துக்கும் வாரிசுக்கும் அருகதையற்றவள். உங்களுக்கும் சாந்திமதி அம்மா பெரிதும் கடமைப்பட்டவர்கள். ஆதலால். அந்தச் சொத்தை உங்கள் மனப்படி தர்மம் செய்யுங்கள். நான் குழந்தையுடன் போய்வருகிறேன், அம்மா, போய் வருகிறேன்."

விம்மலுடன் ஒரே மூச்சில் கூறிய வள்ளி, ஜயந்தியைத் தூக்கி வாரியணைத்தாள். மறு கணம் ஜயந்திக்குப் போடப் பட்டிருந்த நகைகள் அனைத்தையும் கழற்றிக் கீழே போட்டாள். குழந்தையைத் தூக்கித் தோளில் சாய்த்தவண்ணம் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தாள் வள்ளி.

சிலையாய்ச் சமைந்து நின்றாள் டாக்டர் நளினா. செய்வது அறியாமல், சொல்வதறியாமல், வள்ளிபோன திசையையே வெறித்து நோக்கியவண்ணமிருந்த நளினாவின் மனம், 'இனிமேல் வள்ளியின் பிழைப்பு எப்படி நடக்கும்? குழந்தையின் கதி என்னவது?' என்று கேட்க ஆரம்பித்தது.

*'———நீ இன்றி எனக்கு உலக மில்லை; கனவில்லை; எதிர்கால மும் கிடையாது. அன்று உன் விளையாட்டிற்கு நான் அன்புக் காணிக்கை செலுத்திய என் வலது கண்—செயற்கைப் பளிங்குக் கண் இதோ மண்மீது சிதறிக்கிடக் கிறதே......ஐயோ......!'*

# வாழும் காதல்

"துன்பம் நேர்கையில் யாழெடுத்து
நீ இன்பம் சேர்க்கமாட்டாயா"

ரேடியோவில் பூங்குயில்கீதம் இசை எழுப்பிக் கொண்டிருந்தது. இசையூற்று பிறப்பித்த இன்பவெள்ளத்தில் மிதந்திருந்த ரோகிணி, விழி சிமிட்டும் நாழி தன்னையும் மறந்து, கடந்த சில நாளாக மனதை அலைப்பாயச் செய்த அந்தச் சம்பவத்தையும் மறந்து, பாட்டின் பரவசத்தில் உள்ளத்தைப் பதித்துவிட்டிருந்தாள். துன்பம் துளும்பி நின்ற அவள் நெஞ்சில் இன்பம் சேர்த்தது ரேடியோவின் யாழ் ஒலி. பாட்டு ஓய்ந்தது. அவள் சஞ்சலம் ஏடு துவங்கியது; அமைதி ஏடு புரண்டது.

மாலை நடந்த 'சிரித்த ரோஜா' படப்பிடிப்பின் கடைசிக் காட்சியை நினைவுபடுத்திப் பார்த்தாள் நடிகை மிஸ் ரோகிணி. அழகின் அச்சாணி மண்டபமாக, சோபிதத்துடன் தோன்றினாள் அவள், புன்னகையும் புது நிலவும் பிணையுங்கால் உருவாகும் அழகு மயக்கம் போல. 'ஷூட்டிங்' முடிந்தது; வேஷத்தைக் கலைத்துக் கொண்டிருந்தாள். கார் புறப்படத் தயாராக நின்றது. ஓய்வு அறையில் டைரக்டர் பிரபாகரனும் நடிகை ரோகிணியும் அமர்ந்தனர். மின்சார விசிறி காற்றை அள்ளி வீசியது. மின் ஒளி கண்ணைப் பறித்தது.

"மிஸ் ரோகிணி, முடிவு செய்துவிட்டீர்களா ?"

பிரபாகர் சுழல் நாற்காலியில் சுற்றிக்கொண்டிருந்தார்; மனம் சுழன்றது.

"இன்னும் முடிவு செய்யவில்லை..."

மெத்தை நாற்காலியில் அமர்ந்திருந்த ரோகிணி சுழன்றாள்; எண்ணங்கள் சுற்றின.

டைரக்டரின் கைப்பிடியிலிருந்து சிகரெட் நழுவியது. நடிகையின் உள்ளம் கனல் கக்கியது, சிகரெட்டின் கனல் போன்று.

"போய் வருகிறேன், டைரக்டர் ஸார்"

"நல்லது ரோகிணி. சிரித்த ரோஜாவின் டின்னர் நினைவிருக்கிறதல்லவா ? எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்..."

நினைவுக்காட்சி மறைந்தது; தன் நினைவு வந்தது ரோகிணிக்கு.

"முடிவு! முடிவு என்ன சொல்வது ? திரைப்பட உலகில் தன்னை மின்னும் நட்சத்திரமாக்கப் பிரயத்தனப்பட்ட

டைரக்டர் பிரபாகரனுக்கு என்ன முடிவு கூறுவது? அவர் காட்டிய அன்பிற்கு, எதிர்பார்த்திருக்கும் காதல் வாழ்வுக்கு, திட்டமிட்டிருக்கும் சுவர்க்க இன்பத்திற்கு மத்திய கேந்திரமாக, துணைக்கருவியாக, இதயத்துடிப்பாக அமைந்திருப்பது 'நான்' ஒருத்தியே அல்லவா? நான் மறுத்தால், மாறினால், மாற்றிவிட்டால் அவர் நிலை, கதி, முடிவு என்னாகும்? முடிவு! ஆம்; அவருக்கு என்ன சொல்வது?"

'அந்த முடிவு!'

எந்த முடிவும் அவளுள் கருத்தரிக்கவில்லை. மனக்கண் முன் மலர்ந்திருந்த அக் காட்சியில் அவள் இதயம் பறிபோனாள்.

களங்கமில்லாத முகம்; இன்பத் துடிப்பை உதிர்க்கும் புன்னகை; கதை படிக்கும் கண்கள்—ஆம்; கண்கள்! ஐயோ—அந்தக் கண்!

முடுபனிக்குப் பின் காட்சிதரும் உருவம் மாதிரிதான் ரோகிணியினால் அந்தப் பிம்பத்தைக் காணமுடிந்தது. பல ஆண்டுகள் முன் நடந்த அச் சம்பவத்தின் தொடுவானையத்தில் அமர்ந்தது அவள் மனம்.

*　　*　　*　　*

அப்பொழுது அவளுக்கு எட்டு வயதிருக்கும். அவனுக்குப் பத்து வயது நிறைவு. ரோகிணி அந்நாளில் காமுவாக இருந்தாள். அவன் பெயர் ராமு. ராமுவின் தந்தை ஏழை உபாத்தியாயர். காமு பணக்கார வீட்டுப் பாப்பா. இருவருக்கும் அண்டை வீடுகள். பிஞ்சு உள்ளங்கள் அண்டி அணையச் சந்தர்ப்பங்கள் பயன்பட்டன, பயனளிப்பதற்கெனவே தான் இந்தச் சந்தர்ப்பங்கள் தோன்றுகின்றன போலும்!

அன்று காலை, பள்ளிக்கூடம் போக புத்தகங்களுடன் அவள் வீட்டுக்கு ராமு வந்து சேர்ந்த தருணம், காமு பட்டாஸ் சுட்டுக்கொண்டிருந்தாள். அவன் வீட்டினுள் அடிபெயர்த்து வைப்பதற்கும், அவள் வீசியெறிந்த வாணம் வெடிப்பதற்கும் பொருந்தியிருந்தது. வெடியின் சிதறல் ராமுவின் கண்களைத் தாக்கியது. அவன் சுருண்டு விழுந்தான். 'ஐயோ ராமு' என்று அலறியடித்துக்கொண்டு ஓடி வீட்டில் சேதி சொன்னாள் காமு. அவள் பெற்றோர்கள் பதறினார்கள். ராமுவின் வலது கண்ணினின்றும் ரத்தம் பீறிட்டது, டாக்டர் பார்த்துச் சிறுவனின் ஒற்றைக் கண் பயன்படாதென்று தெரிவித்தார். நேரில் சென்று ராமுவின் தந்தையிடம் மன்னிப்புக் கோறி, செலவுக்கு இருநூறுரூபாய் கொடுத்துச் சிகிச்சை பெறப் பட்டணத்துக்கு அனுப்பி வைத்தார் அவள் அப்பா.

அதன்பின் ஆண்டுகள் எத்தனையோ ஊர்ந்தன; உருண்டன. ராமுவை அவள் காணவில்லை; காணமுடியவில்லை. என்றாலும் அக்காட்சி நேற்று நடந்தது போலவே அவள் மனதில் பதிந்திருந்தது, பிறந்த மண்ணின் நினைவு போல. கண்ணீர் ஆறாக வழிய ராமுவை வழியனுப்பிய காட்சியை அவளால் மறக்கவேமுடியாது. பிள்ளைப்பிராயத்துக் கனவுலக நிகழ்ச்சிகளே அப்படித் தானே? நினைவுகள் வானவில்லின் வண்ணங்கள்போல நிறம் மாறின. வானவில்லின் வண்ணங்களெனில் காட்சிக்கு விருந்தளிக்குமே! ஆனால் இந்த நினைவுகள்—நினைவின் நிழல்கள் கருத்தைக் கருகவைத்து விடுகின்றனவே!

உருண்டுவிட்ட இத்தனை ஆண்டுகளில் அந்த நினைவு முகத்தை, ஆசைமுகத்தை அவள் ஓர் முறைகூடக் காணக்கூடாமல் போயிற்று. திரும்பிய அவள் வாழ்க்

கைப் பாதை, படவுலகின் தலைவாயிலில் மடங்கியது. காமு ரோகிணி ஆனாள். டைரக்டர் பிரபாகர் அறிமுகம் ஏற்பட்டு, ரோகிணியைத் திரைஉலகுக்கு அறிமுகம் செய்விக்கப் பொறுப்பேற்றார். 'சிரிந்த ரோஜா' அங்கம் அங்கமாகவளர்ந்தது; அவர்கள் அன்பும் வளர்ந்தது. பிரபாகரனிடம் இனமறியாத பந்தம், காந்தம்போலக் கவர்ந்திழுக்கப் படுவதை ஒவ்வொருசமயமும் ரோகிணி உணர்ந்திருந்தாள். அவள் உள்ளுணர்வு உணர்த்திக் காட்டியது, ஞாபகத்தை வரவழைப்பதற்கென எழுதி வைத்திருக்கும் டயரிக் குறிப்புப்போன்று.

ஓவியம், நாட்டியம், சங்கீதம் ஆன துறைகளில் ரோகிணி தேர்ந்திருந்தாள். அவள் சூழ்நிலை அப்படி வாய்த்தது. சூழ்நிலைதான் உள்ளம் உருத்தேற வழிவகுத்துக் காட்டும் பயிற்சிக்கூடம்! காலம் முத்திரையிட்ட அவள் கன்னி வாழ்விற்கு மங்களகீதம் பாட அவள் வாய்ப் பளிக்கவில்லை. ஆனால் அவளோ, என்றோ நடந்த தவறுக்குப் பரிகாரமாக ராமுவைச் சந்தித்து, தன் இதயத்தைத் திறந்து காட்டி அர்ப்பணிக்க வேண்டுமென்ற ஒரே லட்சியம் கொண்டு காத்திருக்கும் கன்னி! அவள் விசித்திரப் பிறவி, விந்தை உலகிலே. அவள் காதல் அப்படி; இதயம் அப்படி, கனவு அப்படி!

நிலவுக் குமரி முல்லை நகையை இழைக்கோலமாக்கிக் கொண்டிருந்தாள் வான வீதியிலே. விண் மீன்கள் கண் சிமிட்டிக் காதல் பேசின. இயற்கையின் மோகன அமைப்பில் உலகம் மையலால் நையலுற்றிருக்கும் வேளை அல்லவா இது? ஆனால், உள்ளத்தில் களிப்பிருந்தால்தானே நிலவு ரசனைக்குரிய பொருளாகும்? நினைக்கும் சமயம்

நினைத்த போக்கிற்குத் திசை திருப்பக்கூடிய தல்லவே உள்ளம்? அது தொட்டாற் சுருங்கியாயிற்றே!

"டைரக்டர் ஸார்,

தயை கூர்ந்து என்னை மறந்து விடுங்கள். நானும் உங்களை மறந்துவிட எத்தனம் செய்கிறேன். என் உள்ளம் என்றோ ஓர் 'துணை' நாடிவிட்டது. தங்கள் அன்பிற்கு அடிபணிகிறேன்; ஆதரவுக்கு அஞ்சலிகள்.

ரோகிணி"

அவள் காலையில் கடிதத்தை டைரக்டர் பிரபாகரனுக்கு அனுப்பிவிட்டாள். நீர் கரைகாட்டி நின்ற அவள் நெஞ்சரங்கில் பிரபாகரனின் அன்புருவம், அழகான கண்கள், ஆதரவுப் பார்வை, சிரிக்கும் உதடுகள் எல்லாம் தோன்றின—மறைந்தன, கடைசி முறையாக! கண்களைத் துடைத்து விட்டுச் சுவரில் சாய்த்து வைத்திருந்த திரைச் சேலை மீது பார்வையை வீசினாள் பாவை. மீண்டும் தூரிகையும் கையுமாக அமர்ந்தாள். உருவாகிக்கொண்டிருந்த சித்திரம் உயிர் பெற்றுக்கொண்டிருந்தது. காதல், கனவு, வைராக்கியம் இவை அவள் வாழ்வின் லட்சியச் சிந்தனைக் கோட்டின் கனவுப் புள்ளி மையங்களாக அமைந்தன. இதயம் விழித்திருந்தது. என்றோ கண்ட பசலை முகம், காலத்தின் முதுமைக்கு ஈடு கொடுத்து வளர்ந்திருந்தது. அந்தக் கபடமில்லா முகம்—கனிந்த பார்வை; பேசும் விழிகள்.....

உள்ளம் ஒளிவீசிக் காட்டிய உருவத்தைச் சித்திரமாக்கிக்கொண்டிருந்த ரோகிணி கண்களைத் திறந்தசமயம் கணத்தில் சித்திரப்பாவையாகிவிட்டாள் செயலிழந்து.

"ஆ"

சித்திரத்தை—கற்பனையில் வளர்ந்திருந்த ராமுவின் பிரதிபிம்பத்தைக் கண்ட அவள் நெஞ்சம் தஞ்சமடைந்தது அதிர்ச்சிக்கு.

'என்ன ஆச்சரியம் இது! ராமுவின் முகத்தின்முன் டைரக்டர் பிரபாகரனின் தோற்றம் பிரதிபலித்து நிற்கிறதே. என்ன விந்தை இது? ராமுவிற்கும் பிரபாகரனுக்கும் என்ன சம்பந்தம்? உள்ளம் காட்டிய சம்பந்தமா இது? அல்லது ராமுவேதான் பிரபாகரனா? டைரக்டர்தான் என் இதய பீடத்தில் கொலுவீற்றிருந்த உருவமா? அப்படியென்றால் என் உள்ளத்திலே ராமு இடம் பெறவில்லையா? ஐயோ...ராமுவைக் காணவேமுடியாதா? என் உள்ளத்தைத் தூண்டில் போடும் பழைய சம்பவத்துக்குப் பிராயச்சித்தம் பெறவே முடியாதா? எல்லாமே விசித்திரமாக அமைந்திருக்கிறதே? ஏன்? நான் விசித்திரப்பிறவி என்பதற்காகவா?'

வாய்மூடி மௌனியாகி நின்றாள் நடிகை. தன் விளையாட்டுக்குப் பலியான ராமுவின் வலது கண் ஞாபகம் வந்தது. ஏறிட்டுப் பார்த்தாள் படத்தை. குலை நடுங்கிற்று அவளுக்கு. சித்திரத்து உருவத்தின் வலது கண்ணின் றும் ரத்தம் கசிவதுபோலத் தோன்றிற்று அவளுக்கு. கண்ணீர்த் துளிகள் ஓவியத்தில் பரவிவிட்டன; வர்ணம் செந்நிறமாகக் கசிந்திருந்தது. 'ஏன் இப்படிச் சந்தர்ப்பங்கள் ஊடும்பாவுமாக அமைய வேண்டும்?' — அவள் பதைத்துப் போனாள், மனச் சவுக்கடியின் வேதனை தாளமாட்டாமல்.

'ராமு—பிரபாகர் இருவருக்கும் ஏதோ தொடர்பிருக்கத்தான் வேண்டுமோ? ஆனால், பிரபாகரனின் கண்கள்

எழில் பெற்றவை யாயிற்றே. பிரபாகரனின் அறிமுகம் கனிந்தபோதே அவர் உருவிலே என் ராமுவைக் கண்டேனே...ஆனால், ஒரே அச்சில் இரு முகங்கள் உலகிலே எத்தனையோ காண்கிறோமே. ஆனால், ராமு...அந்த ஒரு கண்—என் விளையாட்டு பலி கொண்ட அந்த வலது கண்...'

குழப்பத்தின் எல்லைக் கோடு அண்டியபோது, வேலைக்காரி ஓடி வந்து "அம்மா, பாவம் யாரோ ஒரு நாடோடி, பங்களாவுக்கு முன்னாலே மயக்கமா விழுந்து கிடக்கறானுங்க" என்றாள்.

தாடியும்மீசையுமாகப் பார்க்கப் பரிதாபமாகக் காணப்பட்டான் அந்த நாடோடி. வேலைக்காரி அவன் முகத்தில் தண்ணீர் தெளித்தாள். சற்றைக்கெல்லாம் அவன் கண் திறந்தான். ஒளி தோன்றி மறைந்தது அவன் பார்வையில். அவள் பார்த்தாள்; அவனும் பார்த்தான். அவள் நடிகை ராணி; அவன் நடோடிப் பரதேசி.

"நான் எங்கேஇருக்கிறேன்? இங்கே எப்படி வந்தேன்? ஐயோ, நான் போகவேண்டும்...ஆமாம்; நான் போகவேண்டும்" என்று பதறினான் நாடோடி.

"ஐயா" என்றாள் நடிகை ஆதரவு கனிய.

"ஐயோ" என்றலறினான் நடோடி நெஞ்சம் வெடிக்க.

"என்ன ஐயா?"

அவன் கரங்கள் வலது கண்ணை இறுகப் பிடித்திருந்தன. அதன் இடை வெளியில் ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

"கண்ணிலிருந்து ரத்தம் பீறிடுகிறதே. எங்கேனும் புண் பட்டு விட்டதா, ஐயா?"

"இல்லை. நான் புண்படுத்திக் கொண்டு விட்டேன்."

"என்ன ?"

"ஆமாம்; விசித்திரமாக இருக்கிறதா ? நான் விசித்திரப்பிறவி; என் காதல் விசித்திரமாகிவிட்டது. சின்ன வயசில் ஒன்றாய் விளையாடிய என் கனவுப் பதுமையை இடையில் பிரிந்து, பின் சந்தித்தேன் என் காதலை வெளியிட்டேன். அவள் நிராகரித்தாள். என் உள்ளத்தில் அவளுக்குத்தான் இடமுண்டு. பின்னே இந்தக் கண் எதற்கு? அதுவும் அன்று அவளது விளையாட்டுக்குக் காணிக்கையாகிவிட்ட கண் எதற்கு ? என் அகக் கண்ணில்தான் என்றும் எழில்நடமிடுகின்றாளே என் இதயராணி..."

நாடோடி சிரித்தான். சித்தம் மாறிய சிரிப்பல்ல; சிந்தை மாற்றப்பட்ட அவலச் சிரிப்பு.

நாடோடியின் கதை அவளைத் திகைக்கச் செய்தது. அவன் சொன்ன கதைக்குத் தானும் ஏதோ தொடர்பு கொண்டிருப்பதுபோல அவள் உள்மனம் சொல்லியது. அவள் அவனைப் பார்த்தாள். தாடியும் மீசையுமாகக் கிடந்த அவனைக் கண்டதும் அவள் மனம் மாற்றம் காட்டியது. ராமுவை அவ்வுருவில் ரோகிணியால் திடம் காண முடியவில்லை.

சுயநினைவு பெற்ற ரோகிணி கண்மலர்களை இதழ் விரித்தாள். அவள் கண்ணோட்டம் சூன்யத்தில் நிலைத்தது. நாடோடியைக் காணோம். அவள் இதயம் சூன்ய கோளமாகப் பரிணமித்திருந்தது.

ராமுவின் படத்தை வரைந்து, அதன் மூலம ஓரளவு சாந்திபெற எண்ணி எழுதிய படத்தில் டைரக்டர் பிரபாகரனின் உருவத்தைக் கண்டதும்—சற்று முன் வந்த நாடோடி

கூறிய கதை தன் பிஞ்சுப்பிராய நிகழ்ச்சியை எடுத்துக் காட்டியது—இவை அவள் பேதை நெஞ்சத்தைப் பேதலிக்கச் செய்தன.

மேஜை மீதிருந்த சித்திரத்தில் வலது கண்ணினின்றும் வழிந்திருந்த செந்நிறம் காய்ந்துவிட்டிருந்தது. அதே கணம், நாடோடியின் வலது கண்ணிலிருந்து வழிந்திருந்த ரத்தக் காட்சியை நினைவுகூர்ந்தாள். அவள் நயனச் செம்புகளில் கண்ணீர் மட்டமாகத் தளும்பி வழிந்துகொண்டிருந்தது.

* * *

அன்று 'சிரிந்த ரோஜா' படப் பூர்த்தியின் தேநீர் விருந்து. கதாநாயகியாக நடித்திருக்கும் ரோகிணியின் புகழ் பாடப் பிரசங்கமும் ஏற்பாடு செய்திருந்தார் டைரக்டர் பிரபாகரன். புறப்படத் தயாராக இருந்தாள் நடிகை. அவள் உள்ளம் அனல்பட்ட பூவாக வாடிக் கிடந்தது. குழம்பிக்கிடந்த அவள் மனத்தில் 'டைரக்டரை இனி எந்த முகத்தைக் கொண்டு காணமுடியும்? நான் எழுதிய கடிதத்தைப் பார்த்திருப்பாரே' என்ற எண்ணங்கள் பேய்க்கூத்தாடின.

அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது இரவில் கண்ட அந்த நாடோடி போலத் தானும் காதல் பைத்தியமாகி விட்டால்கூடத் தேவலாமென்றிருந்தது அவளுக்கு. 'சிரிந்த ரோஜா' வில் கடைசிக் கட்டத்தில், காதல் பைத்தியமாகத் தான் நடித்து டைரக்டரது போற்றுதலைப் பெற்ற நிகழ்ச்சியும் அவள் நெஞ்சில் ஊடுருவிப் பாய்ந்தது.

'அப்படியே என் உண்மை வாழ்விலேயும்நேரிட்டு விட்டால், ராமுவின் நினைவு ஒன்றிலேயே என் உலகத்தை ஆக்கிக்கொள்வேனே...'

அதுசமயம் உறையிட்ட கடிதமொன்று ரோகிணிக்கு வந்தது.

''ரோகிணி,

பிஞ்சு நாளைய ராமுவை நீ மறந்தா போனாய்? ஆனால் நான் காமுவை மறக்கவே முடியாது. காலம் செப்பிடுவித்தைக்காரன். ராமுவும் காமுவும், பிரபாகரன்-ரோகிணி ஆகிவிட்டோம்!

அன்று தொட்டு என் அகத்தைக் தொட்டு அரும்பி நிற்கும் எழில் ரோஜா நீ. ஏதோ ஒரு பாசம், பாசவெறி—காதல், காதல்வெறி எனக்கு உன்பேரில். பிஞ்சுநாளில் நாம் கொண்டிருந்த பாசமும் பிணைப்பும் பிறப்பித்த காதல் முடிவு அது. நீ மறுத்து விட்டாய். நான் விசித்திரமாகி விட்டேன், நீ இன்றி எனக்கு உலகமில்லை; கனவில்லை; எதிர் காலம் கிடையாது. அன்று உன் விளையாட்டிற்கு நான் அன்பு காணிக்கை செலுத்திய என் வலது கண் செயற்கைப் பளிங்குக் கண் இதோ மண்மீது......சிதறிக் கிடக்கிறதே. ஐயோ...!கடைசி முறையாக உன் முகத்தைத் தரிசிக்க இரவு தாடியும் மீசையுங்கொண்ட நாடோடியானேன்.

ஆனால் ஒன்று! 'சிரித்த ரோஜா' எங்குமே திரையிடப்படாது. நீ திகைத்து நிற்பாய். ஆம்; உலகம் அதைக் காண விடமாட்டேன். தினமும் படத்தை ஓடச் செய்து அதில் தோன்றும் உன் முகம் கண்டு மயங்கிக் கிடப்பதுவே என் எதிர் காலம். நான் விசித்திரப்பிறவி, நீ என்னை

விசித்திர மாக்கிவிட்ட காரணத்தால், நீ என் காதலின் முடிவை விசித்திரமாக்கிவிட்ட காரணத்தால்!

டைரக்டர் பிரபாகரன்"

மயங்கி விழுந்த அவள் உணர்வு கூட்டி எழுந்தாள். அவள் வலது கண்ணினின்றும் ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அவள் எழுதிய படம் அவளின் பிடிப்பில் அடங்கியிருந்தது. டைரக்டர் பிரபாகரனைக் காண, வெறி தூண்டிவிட்ட வேகத்துடன் காரைச் செலுத்திக்கொண்டிருந்தாள் நடிகை மிஸ் ரோகிணி!

எங்கள் புதிய வெளியீடு!

# வாழ்க்கைப் புயல்

## 'சுகி' எழுதிய சிறந்த நாவல்

ஆசிரியர் அநேக உணர்ச்சி ததும்பும் கட்டங்களை இந்த நாவலில் ஏற்படுத்தி இருக்கிறார்; அடுத்தடுத்து சம்பவங்களைச் சொல்லி நாவல் முழுவதும் நாடக மயமாக்கி விடுகிறார். நல்ல கதை; ரசபேதம் ஏற்படுகிற கட்டங்களில் ஆபாசத்துக்குள் ஐக்கியமாகி விடாமல் கதையையும் பாத்திரங்களையும் சமாளிக்க வைத்திருக்கிறார்.

—தினமணி கதிர்

ஆசிரியர் சுகி இந்த நாவலில் மறந்து போக முடியாத சம்பவங்களையும், சிந்தனையைக் கிளறும் கருத்துக்களையும் ரஸமான இயற்கை வர்ணனைக் காட்சிகளையும், கண்ணம்மா என்னும் ஜீவனுள்ள ஒரு கதாபாத்திரத்தையும் அளித்திருக்கிறார்.

—சுதேசமித்திரன்

**விலை ரூபா ஒன்று**

---

## புதுமைப் பிரசுரம்

**பெண்ணாடம் * தெ. ஆ. ஜில்லா.**

எமது அடுத்த வெளியீடு!

# தாகம்

●

புதுப் புது உவமைகளைக் கையாண்டு கவிதையின்—நயமும் அழகும் அமைவுற பல நாடகங்களை ஆக்கித் தந்தவர் ஆஸ்கார் ஒயில்ட்.

அழகு மிளிரும் அவரது நாடகங்கள் பலவற்றுள்ளும் தனிச் சிறப்பினை பெற்றுள்ள நூல் தாகம் என்ற இந்த நவீனம். தமிழின் இனிமையையும் இலக்கியத்தின் சுவையையும் ஒருங்கே பருக விரும்புபவர்க்கு சிறந்த விருந்தாக அமையும் வகையில் அகிலன் அவர்கள் இதனை அழகாக தமிழில் தருகிறார்கள்.

●

புதுமைப் பிரசுரம்
பெண்ணாடம் :: தெ. ஆ. ஜில்லா